# சந்திரனில் மனிதன் இறங்கும் பயணம் அடுத்த மாதம் 16-ல் ஆரம்பம்

Registered as a Newspaper in Ceylon　　வார மலர் ★ விலை சதம் 20




# ஈழநாடு
EELA NADU

மில்க்வைற்
நீல சோப்
10 சதக் கட்டி
வாங்கி அதிக லாபம்
அடையுங்கள்

மலர் 11 | சௌமிய வைகாசி 32 | ரபி;அவ் 28 | (14-6-69) | சனிக்கிழமை | இதழ் 123

## அப்போலோ-11 தயாராகிறது

வாஷிங்டன், ஜூன் 13

சந்திரனில் மனிதன் காலடி எடுத்துவைக்கும் வரலாற்றுப்புகழ்மிக்க யாத்திரை அடுத்தமாதம் 16ந் திகதி ஆரம்பமாகும் என அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிப் பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்திரனைநோக்கிச் செல்லும் விண்வெளிக் கப்பலில் ஆம்ஸ்டிராங் (30) ஆல்பிரின் (30) மைக்கேல் காளிஸ் (36) ஆகிய மூவரும் செல்வார்கள். இம்மூவரும் ஜூலை 24ந்திகதி தம்பயணத்தை முடித்துக்கொண்டு பூமிக்குத் தி [illegible]

விண்வெளிக்கப்பல் சந்திரனை அண்மியதும் கப்பலிலுள்ள சந்திர ஊர்தி பிரிந்து சந்திரனில் இறங்கும். ஆம்ஸ்டிராங்கும் சாலின்சுமே சந்திரனில் முதல் இறங்கும் மனிதர்களாக இருப்பார்கள் இவர்கள் சந்திரனில் இறங்கும் போது இவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் உடன் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஆல்பிரின் தாய்க்கலத்திலிருப்பார்.

# இன்று சர்வகட்சி மகாநாடு; தீவுப்பகுதி எம். பி. கலந்துகொள்வார்

## இன்றைய விழா நிகழ்ச்சிகள்

காலை 5-30 மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து 26 மைல் மரதன் ஓட்டம் ஆரம்பம். (முழு விபரங்களும் 16-ம் திகதி 'ஈழநாட்'டில் வெளிவரும்)

காலை 8மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து அலங்கார வர்த்தகவண்டிகளதும், வினோதஉடையாளர்களதும் ஊர்வலம் ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு யாழ். ஸ்டேடியம் மைதானத்தை வந்தடையும்.

பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். ஸ்டேடியத்தில் உதைபந்தாட்டம்.

பிற்பகல் 4-30 மணிக்கு மத்திய கல்லூரியில் (செற் அப்) கரபந்தாட்ட இறுதிப் போட்டி.

வின் கலியாணம்', தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் 'வன்றெூண்டர்' என்ற நாடகமும் இடம்பெறும். நிகழ்ச்சிகளின் இடைவேளையில் செல்வன் 'நித்தி' கனகரத்தினத்தின் வாத்தியஇசைநடைபெறும்.

இரவு 10-30 மணிமுதல் யாழ். கோட்டை வெளியில் வாணவிளையாட்டுகள்.



## தமிழ்த் தலைவர்களை ஒன்றுபடுத்த இளைஞர் இயக்கத்தினர் முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வகட்சி மகாநாட்டில், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் கலந்துகொள்வார். இம்மகாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்புக் கிடைத்ததாகவும், தான் கட்டாயம் கலந்துகொள்ளப்போவதாகவும் ஊர்காவற்றுறை எம். பி. திரு. நவரத்தினம் நேற்று தெரிவித்தார். தமிழரசுக்கட்சி பொதுச்செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம், முன்னர் கூட்டிய சர்வகட்சி மகாநாட்டில் திரு. நவரத்தினம்கலந்துகொள்ளவில்லை.

தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளைக் காண்பதற்காக, ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தினர் கூட்டும் மகாநாடு இன்று காலை யாழ்ப்பாணம் மாநகர சபை கமிட்டி அறையில் நடைபெறுகிறது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ளு

ளர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாக இயக்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தினர் கட்சிசார்பற்றவர்கள் எனக் கூறப்பட்டபோதிலும்அவர்களின் நடவடிக்கையைக்கவனித்தால் [illegible] ஒருகட்சிஆதரவாளர்களாகக்காணப்படுவதாகவும், தமி

யில்லாமல் திருமணம் நடத்தியதுபோல் இருக்குமென்றும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் தெரிவித்தார்.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையிலுள்ள நான்குதொழிற்சங்கங்களின் மகாநாட்டில் 14-ம் தேதி காலை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்துகொள்ள விருப்பதால் சர்வகட்சிமகா

## அந்தோனியார் சமவெற்றி

கிளிநொச்சி, புதன்


7-6-69 மாலை கிளிநொச்சி றெட்டிக்கோ மைதானத்தில் விசுவமடு விவசாயப் படையினருக்கும் யாழ்ப்பாணம் சென் யோசப் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இருபகுதியினரும் ஒவ்வொரு கோல்களைப் பெற்று ஆட்டத்தை முடித்தனர். திரு. எஸ் செல்வரத்தினம் மத்தியஸ்தராக கடமையாற்றினார். ......

## வீதி வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

தீவுப்பகுதியில் உள்ள இரு வீதிகளை திருத்துவதற்காக பணம் ஒதுக்கப்பட்டுவிட்ட

## 'ஈழநாடு' மர்ம மனிதன்? இவர் தான்!



பெயர்: ......................................

விலாசம்: ......................................

## ரூபா 100 பரிசுபெறுங்கள்!

இன்றைய ஈழநாட்டின் 5 பிரதிகளை வாங்குங்கள். ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரையும் முகவரியையும் எழுதுங்கள்.

அவற்றைச் சுருட்டிக் கையில் வைத்துக்கொள்ளுங்கள்.

மேலே உள்ள கண்களுக்குச் சொந்தக்காரரைக் கண்டதும், இப்பத்திரிகைச் சுருளினால் அவரைத் தட்டி, 'ஹலோ, மிஸ்டர்' ஈழநாடு என்று சொல்லுங்கள்.

நீங்கள் அப்படி அழைத்தவர் 'ஈழநாடு' மர்ம மனிதனாயின் உங்கள் 5 பத்திரிகைகளையும் அவர் வாங்கிக்கொண்டு ஒரு பணம் பெறும் சீட்டைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். ஸ்டேடியத்தில் உதை பந்தாட்டம்.

பிற்பகல் 4-30 மணிக்கு மத்திய கல்லூரியில் (செற் அப்) கரபந்தாட்ட இறுதிப் போட்டி.

மாலை நிகழ்ச்சிகள்:

**யாழ். திறந்த வெளியரங்கு-கலைவிழா! என். ஆர். சின்ன ராஜா குழுவினரின் நாதஸ்வரம். வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி,** சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியன அளிக்கும் நாட்டியநிகழ்ச்சி.

விழாப்போட்டிகளுக்கான பரிசில்களை டாக்டர் வி. ரி. பசுபதி வழங்குவார்.

சொற்பொழிவுகளை அடுத்து இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் 'ருக்கு



''ஈழநாடு'' பத்தாவது ஆண்டுவிழாப் போட்டிக்குப் பரிசிலாக வெள்ளிக்கிண்ணம் வழங்க நிதி உதவி வழங்கிய யாழ்ப்பாணம் வண்ணை பண்ணையைச் சேர்ந்த திரு. கனகசபை கைலைநாதன்.

களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளைக் காண்பதற்காக, ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தினர் கூட்டும் மகாநாடு இன்று காலை யாழ்ப்பாணம் மாநகர சபை கமிட்டி அறையில் நடைபெறுகிறது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு, தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எம். இராஜமாணிக்கம், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம், சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. என். சண்முகதாசன், தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

புரட்சிவாத சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜக்கட்சி ஆகியவற்றிற்கும், மற்றும் தமிழ் பகுதி ஆட்சிமன்ற உறுப்பி இயக்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தினர் கட்சிசார்பற்றவர்கள் எனக் கூறப்பட்டபோதிலும் அவர்களின் நடவடிக்கையைக்கவனித்தால் அவர்கள் ஒருகட்சிஆதரவாளர்களாகக்கரணப்படுவதாகவும், தமிழர் நலன் குறித்துத் தாங்களும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பதாகவும், புரட்சிவாத சமசமாஜக்கட்சியைச்சேர்ந்த திரு. வி. எம். பொன்னையா நேற்றுத் தெரிவித்தார்.

தீண்டாமையை ஒழிப்பதில் அக்கறைகாட்டும், இளைஞர் இயக்கத்தினர், முதலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினருக்கு அழைப்பு அனுப்பியிருக்க வேண்டுமென்றும், தனக்கு எவ்வித அழைப்பும்கிடைக்கவில்லையென்றும், தங்களை அழைக்காமல் நடைபெறும் இந்த மகாநாடு மாப்பிள்ளை

திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் தெரிவித்தார்.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையிலுள்ள நான்குதொழிற்சங்கங்களின் மகாநாட்டில் 14-ம் தேதி காலை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்துகொள்ள விருப்பதால் சர்வகட்சிமகாநாட்டில், அவர் கலந்து கொள்வது சாத்தியமாகாதென்று தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த்தலைவர்களை ஒன்றுபடுத்தும் நோக்கமாகவே இம்மகாநாடு கூட்டப்படுவதாக இளைஞர் இயக்கத் தலைவர் தெரிவித்தார்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை, சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்ளாதென்றும் இதுபற்றி இளைஞர் இயக்கத்திற்கு அறிவித்துவிட்டதாகவும் திரு. எம். சி. சுப்பிரமணியம் நேற்றுத்தெரிவித்தார்.

## வீதி வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

தீவுப்பகுதியில் உள்ள இரு வீதிகளை திருத்துவதற்காக பணம் ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும், வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

புங்குடுதீவு கிழக்கில் உள்ள வல்லன் வீதியின் ஒரு பகுதி வேலைகள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன. மிகுதி வேலைகளுக்கான பணம் ஒதுக்கப்பட்டுவிட்டது. வேலணை மேற்கிலுள்ள கைத்தனை வீதி வேலைக்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வீதிகள் திருத்தும் வேலைகள் சம்பந்தமாக ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், மராமத்து மந்திரியைச் சந்தித்தார்.

மேலே உள்ள கண்களுக்குச் சொந்தக்காரரைக் கண்டதும், இப்பத்திரிகைச் சுருளினால் அவரைத் தட்டி, 'ஹலோ, மிஸ்டர்' ஈழநாடு என்று சொல்லுங்கள்.

நீங்கள் அப்படி அழைத்தவர் 'ஈழநாடு' மர்ம மனிதனாயின் உங்கள் 5 பத்திரிகைகளையும் அவர் வாங்கிக்கொண்டு ஒரு பணம் பெறும் சீட்டைத் தருவார்.

இன்று இரவு திறந்த வெளியரங்கில் 8 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் உங்கள் பெயர் படிக்கப்படும். பணம் பெறும் சீட்டைக் கொடுத்து ரூபா 100 பரிசுபெறுங்கள்.

**ரூபா 100 சம்பாதிக்கும் வழி இதுதான்!**

'ஈழநாடு' மர்ம மனிதன் இன்று முற்பகல் நடைபெறும் வர்த்தக அலங்கார ஊர்வலத்தில் கலந்து கொள்வார். இன்று பகல் அவரை நீங்கள், எந்த வீதியிலும், எந்தப் பொது இடத்திலும் வைத்து அடையாளம் காட்டலாம்.

**தயவுசெய்து வீடுகள் கடைகளுக்குள்ளே இருக்கிற யாரையாவது தேடாதீர்கள். அவர் அங்கே இருக்கமாட்டார்.**

# ஈழநாடு பத்தாவதாண்டு நிறைவு விழா

# இன்று இறுதிநாள் விழா! காலை அலங்கார வர்த்தக பவனி! மாலை உதைபந்தாட்டம்! இரவு கலை விழாவும் வாணவேடிக்கையும்!

## நள்ளிரவுவரை குடாநாடு முழுவதும் விசேஷ பஸ் சேவை

— நமது காரியாலய நிருபர் ''திரு'' —

நேற்றும், நேற்று முன் தினமும் நடைபெற்ற பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சிப் போட்டி, **விளையாட்டுக் கழகங்களின் வலைப்பந்தாட்டம், உதை பந்தாட்டம், கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகியனவற்றைத் தொடர்ந்து 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.**

ஈழம் வாழ் மக்களின் இதயங்களின் நீங்காத நிறைவு பெறும், இனிய பெருநாளும் இன்பத் திருநாளுமான இன்றைய நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கவரும் வாசக ரசிகப் பெருமக்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு இன்று விழா முடிவடைந்த பின்னர் நள்ளிரவுவரை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் செல்ல விசேஷ இ. போ. ச. பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய முதல் நிகழ்ச்சியாக 26 மைல் மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும். போட்டி நடைபெறும் பாதை இதுதான்:

**'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகும் இப்போட்டி 'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து ஸ்டான்லி வீதி வழியாகச் சென்று நாகவிகாரையை அடைந்து, அங்கிருந்து இடப்பக்கமாகத் திரும்பி, பலாலி வீதி வழியாகப் பலாலிச் சந்தியை அடைந்து அங்கிருந்து இடப்பக்கமாகத் திரும்பி காங்கேசன்துறை வெளிச்சவீட்டுச் சந்தியை அடைந்து, அங்கிருந்து நேரே யாழ்ப்பாணம் நோக்கி வந்து ஸ்ரேடியம் மைதானத்தை அடையும்.**

'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து வடக்கு நோக்கி மானிப்பாய் வீதி வழியாக ஐந்து சந்தி.

அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி மனோகராத்தியேட்டர்-நாவலர் பாடசாலைச் சந்தி.

அங்கிருந்து காங்கேசன் துறைவீதி வழியாக வடக்கு நோக்கித் தட்டாதெருச் சந்தி.

அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி அரசடிவீதி வழியாகக் கந்தர்மடச் சந்தி, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வழியாக முத்திரைச்சந்தை.

அங்கிருந்து கச்சேரி நல்லூர்வீதி வழியாக வை. எம். சி. ஏ. சந்தி.

கண்டிவீதி மெயின்வீதி வழியாக மில்க்பார் முதலாம் குறுக்குத்தெருச்சந்தி.

அங்கிருந்து வலப்பக்கமாகத் திரும்பி, வேம்படிப் பாடசாலையைக் கடந்து ஆஸ்பத்திரிச் சந்தி.

ஆஸ்பத்திரிவீதி வழியாக யாழ்ப்பாணம் நவீன மார்க்கெட்வரை வந்து ராணித் தியேட்டரை அடைந்து, கஸ்தூரியார்வீதி, பெரிய கடைச்சந்தியை அடைதல்.

அங்கிருந்து வலப்பக்கமாகத் திரும்பி, கஸ்தூரியார் வீதி வழியாகக் கன்னாதிட்டி, செல்லம்ஸ் ஸ்ருடியோச் சந்தியை அடைந்து, இடப்பக்கமாகத் திரும்பி வண்ணை சிவன்கோவிலை அடைதல்.

அங்கிருந்து தெற்கு நோக்கிக் காங்கேசன்துறை வீதி வழியாகப் பெரியகடை சத்திரத்துச் சந்தி, பெரிய தபாற்கந்தோர் வழியாக ஊர்வலம் நண்பகல் பன்னிரண்டுமணிக்கு கோட்டை மைதானத்தை வந்தடையும்.

0 0 0

ஈழநாடு பத்தாவது விழாவுக்கென நேற்று மாலைவரை தங்கப்பதக்கங்களையும், பணமுடிப்புக்களையும், வெள்ளிக்கிண்ணங்களையும், மற்றும் பரிசில்பொருட்களையும் தந்துதவியவர்கள் விபரம்:-

யாழ்ப்பாணம் ஆர். வி. ஜி. பீடித்தொழிற்சாலை உரிமையாளர் திரு. வ. வ. இராமசாமிப்பிள்ளை - ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஏ. கே. எஸ். நகை வியாபாரிகள்- ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்- ஒரு தங்கப்பதக்கம்.

யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனம்- ஒரு தங்கப்பதக்கம்.

யாழ்ப்பாணம் சுபாஸ் கபே உரிமையாளர்- ஒரு தங்கப்பதக்கம்.

யாழ்ப்பாணம் நோர்தேன் இன்டஸ்றீஸ் ஸ்தாபனம்- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி கே. என். மீருன் சாகிப் நகை வியாபாரிகள்- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம்கே. டி. எம். ஜுவல்லர்ஸ் நகை வியாபாரிகள்- ஒரு வெள்ளிக் கிண்ணம்.

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டர் உரிமையாளர் திரு. எஸ். தியாகராஜா- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 'எம்மோ' சன்ஸ் ஸ்தாபனத்தார் - ஒரு வெள்ளிக் கிண்ணம்.

கட்டடக்கலை நிபுணரான கொழும்பு வி. ஸி. துரைராசா- ஒரு வெள்ளிக் கிண்ணம்.

கொழும்பு யாழ்ப்பாணம் சூரியா ஜுவல்லர்ஸ் நகை வியாபாரிகள்- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

மெய்கண்டான் அதிபர் திரு. என். இரத்தினசபாபதி -பணமுடிச்சு.

கொழும்பு லீலா ஸ்டோர்ஸ் அச்சக உரிமையாளர் திரு. ரி. சின்னத்துரை-பணமுடிச்சு.

யாழ்ப்பாணம் என். சாம்பசிவம் அன்கோ- விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள்.

யாழ்ப்பாணம் மொகிடீன் ஜுவல்லர்ஸ்- பரிசுப் பொருள்.

எஸ். ஆர். எஸ். ரெக்ஸ் ரைல்ஸ்- ஒரு டிப்ளோமா சேலை.

மானிப்பாய் வெஸ்லி சினிமா- இரண்டு குத்து விளக்கு.

சீடில்ஸ் ஸ்தாபனம் ஒரு ரேடியோ.

0 0 0

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி கம்பனி லிமிட்டட் சிருப்பர் திரு. கே. கைலைநாதன் ஒருவெள்ளிக் கிண்ணம்.

லைடன் இன்டஸ்றீஸ் பெனியன்கள்.

திரு. ஆர். கணபதிப்பிள்ளை ஸ்ரான்லிவீதி-, பணம்.

திரு. இ. கே. தங்கராஜா வேலணை-பணம்.

திரு. கே. அம்பிகாபதி வேலணை-பணம்.

திரு. சி. இரத்தினசாபாபதி- பணம்.

டாக்டர், கே. கனகரத்தினம் - வெள்ளிக் கிண்ணங்கள்.

டாக்டர் வி. ரி. பசுபதி- பணம்.

திரு கே. சதாசிவம்- பணம்.

திரு. எம். எம். அப்துல் கரீம் ஹாஷியர்-பணம்.

அப்துல் காதர் அன்ட் பிரதர்ஸ்-ஒரு ஜோடி குத்து விளக்கு.

எஸ். எஸ். குமாரசாமி- புத்தகங்கள்.

சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட்ஸ்தாபனத்தார் சொனி TR 627 ட்ரான்சிஸ்டர் றேடியோ ஒன்றை வெற்றிபெறுபவர்களுக்கு பரிசு வழங்க அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

கைக்கடிகாரம் ஒன்றை சாம்பசிவம் அன்ட் கோ ஸ்தாபனத்தார் வெற்றி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சபை நிறைவேற்றும் நற்பணி எட்டு ஆண்டின் முன் கருக்கொண்ட முயற்சி

## சைவபரிபாலன சபையும் நாவலர் சிலையும்

நாவலர் பெருமான் இறைவனடி சேர்ந்து பத்து ஆண்டுகள் முடிவதன்முன் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் கல்வி, அறிவு, ஒழுக்கம், நாவலர் பக்தி நிறைந்த பிரபுக்களால் யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனசபை நல்ல சுபதினத்தில் சுபவேளையில் அமைக்கப் பெற்றது. இச்சபை கடந்தமாதம் சைவ மகாநாட்டை மிக்க சிறப்புடன் நடத்தித் தனது எண்பதுஆண்டு முத்துவிழாவையும் அதிவிமரிசையாகக் கொண்டாடியது.

### ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

இச்சபையின் முதல் தலைவர், பெருமானின் சகோதரர் ஒருவரது மகன் வித்வசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை. பெருமான் இனசனப் பற்றில்லாதவராக இருந்தாலும் வித்வசிரோன்மணியில் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். ஏன் தெரியுமா? அவர் தன்னைப்போல் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்தாரென்பதால். எவ்விதசன்மானமுமின்றி இவர் தன் மாணவருக்குக் கல்வி புகட்டி வந்தார்.

பெருமான் புராணங்களுக்குப் பயன் சொல்வதில் ஒப்புயர்வற்றவர். அவருக்கு அடுத்தபடியாக நிற்கத்தக்கவர் வித்வ சிரோன்மணியே. இந்தச் சபைக்குச் செயலாளர் பெருமானின் சகோதரி ஒருவரின் மகன் த. கயிலாயபிள்ளை என்பவர். இவர் நாவலர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராகவும்பல்லாண்டுகள் திறம்படக் கடமையாற்றியுள்ளார்.

சைவபரிபாலனசபை ஆரம்பமாகிஇந்தஎண்பது ஆண்டுகளுக்குள் எத்தனையோ சைவசபைகள் தோன்றி, நின்று மறைந்து போயின. ஆனல் சைவபரிபாலன சபை தன்னலங்குன்றாது வளர்பிறையென நாவலர் பெருமான் காட்டிய வழி நின்று சைவத்துக்கும் தமிழுக்கும் தமிழ்மக் [illegible]

நாமறிந்தவரை ஈழத்திலும் சரி, தென்னிந்தியாவிலும் சரி முதன்முதலாக யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையிலேயே ஆலோசிக்கப்பட்டது. சைவபரிபாலன சபையில் ஓர் அங்கத்தவராயுள்ள ஒருவர் சுமார் எட்டுஆண்டுகளுக்குமுன்னுக சைவமகாநாட்டில் ''ஐந்தாங்குரவர் நாவலர்பெருமான் வந்திலரேல்'' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினுர். பெருமானின் பெயரால் நாம் ஆற்றவேண்டிய தொண்டுகளுள் சிலை அமைத்தல் முக்கியமானதொன்றென்று அவர் தமது உரையில் சுட்டிக்காட்டினுர். பெருமானது சிலை யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும், சிதம்பரத்திலும் நிறுவப்படவேண்டுமென அவர் சொன்னுர். பின்னர் அவர் இதேவிடயத்தை இலங்கை வானெலியிலும் பேசியிருந்தார். இப்பேச்சு ஈழத்திலும் தென்னிந்தியாவிலும்பெரிதும்விரும்பப்பட்டது. கல்கி முதலிய சஞ்சிகைகள் அப்பேச்சைவியந்து எழுதின. பெருமானுக்கு யாழ்ப்பாணத்தில் சிலைநிறுவும் விஷயம் சைவபரிபாலனசபையால் ஆரம்பிக்கப்பட்டது.

சபையின், சைவப்பிரசார அமைச்சர் சித்தாந்த சிரோன்மணியவர்கள் கொழும்புசென்று பிரபல சிற்பி மணி அவர்களைக் கண்டு இருபத்தையாயிரம் ரூபாசெலவில் சிலை வடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. சிலை நிறுவுவதற்கு யாழ்ப்பாணமாநகர சபையை ஒரு பொருத்தமான இடம் வழங்குமாறு சபை கேட்டது. மாநகர சபை பொருத்தமானஇடம் தரச் சம்மதித்தது. ஆனல் இதற்கான நிதி திரட்டும் முயற்சியில் சபைக்கு அறுநூறு ரூபா மட்டுமே சேர்ந்தது. இதன் காரணமாக இவ்விஷயம் நிறைவேருது போயிற்று.

கடந்த ஆண்டு சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி தமிழ் வளர்த்த பெரியார்களுக்குச் சென்னையில் சிலை அமைக்கப்பட்டபோதிலும் துரதிர்ஷ்ட வசமாக பெருமானின்சிலைஅங்குஇடம்பெருது போயிற்று. இதனைப் பொறுக்காத சைவபரிபாலனசபையின் பிரஸ்தாப உறுப்பினர் காணியமைச்சின் நிரந்தரச் செயலாளர் சைவத்திருவாளர் ம. ஸ்ரீகாந்தாவைச் சந்தித்து, வயதான காலத்தில், தாம இறப்பதற்கு முன்னுல் யாழ்ப்பாணத்து நல்லூரில் நாவலர் சிலையைக் கண்டுகளித்து வாழ்த்தி வணங்கிச் சாகவேண்டுமெனவும், சிலையமைக்கும் பெரும்பணியில் அவர் ஈடுபடவேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்.

சைவபரிபாலனசபைமுயற்சித்து இதுவரை ஒப்பேருதிருநத இப்பணியை, சென்னையில் செய்யத்தவறிய இப்பணியை இன்று நாவலர் சபை நிறைவேற்றியுள்ளது, சைவ, தமிழுலகம் செய்த அதிர்ஷ்டமேயாகும்.

(தொடரும்)

அறநெறிக் காவலர்

### முதலியார் செ. முத்துத்தம்பி

# ஏழைகளிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காணவேண்டும்

## அதுவே உண்மை வழிபாடாகும்

[27-1-189-ல் சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வரம் கோவிலுக்கு விஜயம்செய்து அங்குஉபந்நியாசம் செய்தார். அந்தச் சொற்பொழிவு அவர் நினைவாகக் கல்லில் வடிக்கப்பட்டு இராமேஸ்வரம் குட கோபுர வாசலில் அவர் சொற்பொழிவாற்றிய இடத்தில் பதிக்கப்பெற்றுள்ளது. அச் சொற்பொழிவின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது ]

அன்பே சமயம். தூய உள்ளன்பிலன்றி புறச்சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை. உடல் சுத்தமும், உள்ளத் தூய்மையுமின்றி சிவபெருமானை வழிபடுதலில் பயனில்லை. சுத்தமான உடலுடனும், தூய்மையான உள்ளத்தோடும் சிவபெருமானை வழிபடுவோருடைய பிரார் [illegible]

ஆனல் பக்தியும், தூய்மையுமே உண்மையில் வேண்டுவன. அவையிரண்டுமின்றிச் செய்யும் பிறவழிபாட்டினுல் பயனில்லை. ஆகையால் இந்த உண்மையை நீங்கள் யாவரும் நினைவில்வைத்துக் கொள்ளவேண்டும்.

மனததூய்மையின்றி ஒருவன் கோவிலுக்குள் சென்றுல், அவன்ஏற்கனவே செய்துள்ள பாவங்களோடு மற்றெரு பாவத்தையும் செய்தவனுகிருன். ஆகவே அவன் தன் வீட்டைவிட்டுக் கோவிலுக்குப் புறப்படும்பொழுது இருந்ததைவிட இன்னும் இழிந்தநிலையில்தான் ஆலயத்திளின்றும் வீட்டிற்குத் திரும்புகிருன். தீர்த்தமாடும் க்ஷேத்திரத்தில் அநேகபுனித வஸ்துக்களும் பரிசுத்தமான மக்களும் உறைகின்றனர். சாதாரணமான இடத்தில் [illegible]

யும் பாவத்தைப்போக்க வழியேதுமில்லை.

எல்லாவித வழிபாட்டின் சாரமாவது, தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மைபுரிவதுதான். ஏழை எளிய மக்கள், நோயுற்றமக்கள், இவர்களிலே சிவத்தைக் காண்பதுதான் உண்மையான சிவ வழிபாடு. விக்ரகங்களில் மட்டும். சிவனைக்காணமுயலுவது வழிபாட்டின் பூர்வாங்கமேயாகும். கோவிலில் மட்டும் சிவததைக்காண விழைகிறவனைக்காட்டிலும் ஜாதிமதம் மற்ற யாதொரு பேதமுமின்றி ஓர் ஏழை மனிதனிடம்கடவுளைக்கண்டு அழைத்துச் சேவைசெய்து உதவிபுரிகின்றவன்தான் சிவபெருமானின் இன்னருளுக்குப் பாத்திரமாகிறான்.

சிவபெருமானுக்குச்சேவை [illegible]

சிவனடியார்களுக்குச் செய்யும் சேவைதான் சிவபெருமானுக்குச் செய்யும் சிறந்த சேவையெனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் இந்த உண்மையை நீங்கள் தெளிவாய் உணரவேண்டும்.

மீண்டும் நான் உங்களுக்குக் கூறுவதாவது: உங்களை நாடிவரும் எவருக்கும் உங்கள் சக்திக்கு இயன்றவரை தூய உள்ளத்துடன் உதவி புரியவேண்டும். இந்தக் குணத்தினுல்தான் உங்கள் உள்ளம் தூய்மையடைந்து 'சித்தி சுத்தி' அடையமுடியும். அப்பொழுது நம்மிடத்திலுறையும் சிவபெருமான் எங்கும் நீக்கமற நிறைந்தவராவார். அவர் எப்பொழுதும் யாவருடைய உள்ளத்திலும் குடிகொண்டுள்ளார். சுயநலமின்மையே உண்மையான சமயப்பற்றுக்குச் சான்று ஒருவன் எவ்வளவுக்குத் தன்னலமின்றிப் பிறருக்கென வாழ்கிருனே, அந்த அளவுக்கு அவன் ஆன்மீக ஞானம்பெற்ற சிவபெருமான் அருகே இருக்கக்கடவன். அவன் படித்தவனுயினும், பாமரனுயினும் அறிந்தோ அறியாமலோ மற்ற எவரைக்காட்டிலும், சிவபெருமான் பக்கலிலிருக்க அருகதையுள்ளவனுகிருன். அப்படியின்றி ஒருவன் சுயநலம் மிக்கவனுயிருப்பின் அவன் எல்லாக் கோவில்களுக்கும் சென்று க்ஷேத்ராடனம் செய்திருப்பினும், சிறுத்தையுடல்போலக் [illegible]

# சுந்தரவில்லி இராமன்

புவித்தலம் குடுதியின்
புனரி ஆக்கினன்
குவித்தனன் அரக்கர் த
சிரத்தின் குன்றமே

ஆஹா, என்ன சொற்செட்டு! வீர ராமனுடைய வீர தீரங்களையும் கூட மறைக்கின்றன யுத்த கோரங்கள் எனினும் இரத்தக் கடலுக்கும் சிரக் குன்றுகளுக்குமிடையே தோன்றும் அந்தத் 'தெய்வ நாண்' தெய்வ வீரனை எடுத்துக் காட்டுகின்றது ஆம், 'இதோ பாருங்கள் தர்மவேதத்தின் சொரூபத்தை- பரம்பொருளின் அதிகார முத்திரை தரித்து வந்த பரம புருஷனை என்று இத்தகை உணர்ச்சிகளை உறுதிப்படுத்தும் தோரணையிலே தொடங்குகிறது அடுத்த பாட்டும்.

### கம்பர் கவி விருந்து

திருமகள் நாயகன்
தெய்வ வாளிதான்
வெருவரு தாடகை
பயந்த வீரர்கள்
இருவரின் ஒருவனைக்
கடலில் இட்ட(து)
அங்(கு)
ஒருவனை அந்தகன்
புரத்தின் உய்த்ததே!

''தெய்வ நாண்'' என்று குறித்ததும் போதாது என்று கருதியது போல் 'தெய்வ வாளி' என்று ராம பாணத்தையும் குறிப்பிட்டு இந்தத் துஷ்ட நிக்ரகச் செயல்களிலே மறைந்திருக்கும் தெய்வ சங்கல்பத்தை வற்புறுத்துகிருன் கவிஞன். இங்கே இராமனைத் திருமகள் நாயகன் என்றது தெய்வத் தன்மையை மேலும் வற்புறுத்துவதற்கல்ல. 'ஜயலக்ஷ்மியோடு கூடிய ராமன்'' என்று இப்போது அடைந்திருக்கும் வெற்றியைக் குறிப்பதற்காக மட்டும் அல்ல. சீதாலட்சுமியைக் கல்யாணம் செய்து கொள்ளத்தானே போகிருன், திருமணத்தூதனுக வந்த முனிவனேடு? அந்தயாத்திர வழியிலே மைல் கற்களைப்போல் அமையும் நிகழ்ச்சிகள்தான் இந்த அரக்கர்களின் வதமும் அந்தத் தாடகை வதமும் கூட இவை சீதா கல்யாணத்தைத் துரிதப் படுத்துகின்றன. அந்தக்கல்யாணமோ ராமாயணத்தின் தனிப் பெரு நிகழ்ச்சியான ராவண வதத்தையே துரிதப்படுத்தி தெய்வ சங்கல்பத்தைப் பூர்த்தி செய்யப்போகிறது. இவ்வளவையும் ஒரு சங்கிலித் தொடர்போல நினைப்பூட்டுகிறது. 'திருமகள் நாயகன்' என்ற சொற்ருெடர் இந்த அரக்கர் கூட்டத்தின் தலைவர்கள், ராவணன்பாட்டியாகிய தாடகையின் புதல்வர்களான மாரீசனும், சுபாகுவும். இவர்களில் மாரீசனை ராம பாணம் கடலில் கொண்டு போய்போட்டுவிட்டது. மற்றவனையோ யமபுரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டதாம். யுத்த சமயத்திலே ராமன் வேள்விச் சாலைக்கு அம்புப்பந்தல் போட்டதுபோல் இப்போது பிணக் குன்றுகளுக்கும் இரத்தக் கடலுக்கும் மேலே ஒரு பந்தல்போட்டுவிட்டனவாம், பிணம்தின்ன வந்த கழுகு முதலியபறவைகளெல்லாம். அந்தப் பறவைப் பந்தலைக் கிழித்துக் கொண்டு இறங்கியதாம் ராமன் மீது தேவர்களின் பூமழை. அவ்வளவு மிகுதியாக அள்ளி அள்ளிச் சொரிந்து கொண்டேயி [illegible]

ணர்களாம். அந்த முழக்கம் அலை அலையாகக் கோஷித்து வந்ததாம். ஆகாயத்திலிருந்து பூமிக்கு பூமழைக்கும் ஜயகோஷங்களுக்கும் இந்திராதி தேவர்களின் வாழ்த்து வணக்கங்களுக்கும் இடையே 'சுந்தர வில்லி' யாகத் தோன்றிய ராமனை நமக்கும் காட்டுகின்றுன் கவிஞன்-

'செவித்தலம் நிறுத்தினன் சிலையின் தெய்வ நாண்' என்று வர்ணித்த நிலையில் பயங்கரமான பாணங்களை உதைத்துத்தள்ளிய கோதண்ட போர் முடிந்ததும் 'பரம சாதுவாகி' ராமன் கையில் இப்போது அழகாகவும் தோன்றுகிறதாம். ராமனுடைய சுந்தரக் கைக்கு ஆயுதமாக இல்லாமல் ஆபரணமாயிற்று. தேவர்களோடு முனிவர்களும் மகிழ்ந்து போனுர்கள் அந்தப்பூமழையோடு இவர்களும் பூமழை பொழிந்தார்களாம். ஆசிமொழிகள் என்ற பூமழைதான். இயற்கையும் இந்தக் குதூகலத்தில் பங்கு கொண்டதாம். ஆம் காட்டிலுள்ள பூமரங்கள் காற்றினுல் உதிர்க்கப்பட்ட பூக்களைப் பூமாரியாகப் பொழிந்து மகிழ்ந்தனவாம். இத்தனை பூமழைகளுக்கிடையே விச்வாமித்திரன் வேள்வியை முடித்துக் கொண்டு ராமனுக்கு உபசார வார்த்தைகளைச் சொன்னுன்.

புனிதமாதவர் ஆசியின்
பூமழை பொழிந்தார்
அனைய கானத்து
மரங்களும்
அலர் மழை சொரிந்த
முனியும் அவ்வழி
வேள்வியை
முறைமையின் முற்றி
இனிய சிந்தையன்
இராமனுக்(கு)
இணையன இசைந்தார்.

வேள்வி இனிது நிறைவேறி [illegible]

'வசீகரமான இன்னிசை மழைபோலவும் இருந்தது அந்தப்பேச்சு' என்றும் ஊகித்துக்கொள்ளலாம். 'இனிய சிந்தையன். . . இசைத்தான்' என்று கூறுவதிலிருந்து, 'ஆஹகா, என்ன பாக்கியம்பண்ணினேன்' என்று பேசத்தொடங்கினுன். முனிவன் இராமனை நோக்கி, 'இதுவும் உனக்கு ஒரு பொருளா?' என்ருன். என்ன உபசார வார்த்தை! விஸ்வாமித்திர மஹரிஷியல்லவா பேசுகிறவர்?' என்று எண்ணுவதற்குள்ளே மேலும் பேசினுன் தொடர்ந்து. 'எல்லா உலகங்களையும் ஆக்கி, வயிற்றிலும் வைத்து ரக்ஷிக்கும் நீயோ யாக ரக்ஷணம் செய்தாய்! இதுவும் உனக்கு ஒரு பொருளா, ஒரு பெருமையா?' என்று மஹரிஷி சொல்லி முடித்ததும், அது ஒன்றும் புரியாததுபோல் ராமன் சும்மா இருந்துவிட்டான். எனினும் ஒரு சக்தி-விதை விழுந்துவிட்டது உள் மனத்திலே. துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலன ஆசையும் ஜொலிக்கத் தொடங்கியிருக்கவேண்டும், யாகத்தீயைப்போலே விஸ்வாமித்திரனுடைய உபசார வார்த்தையின்பயனுக. ஸித்தாச்சிரமத்திலே, அன்றையதினம் கழிந்தது. பல ரிஷிகளுடனும் மறுநாள் காலையிலே ராமன் விஸ்வாமித்திரனைத் தொழுது நின்று, 'இன்றைக்கு அடியேன் செய்ய வேண்டிய பணி யாதோ? நியமித்தருள வேணும்' என்று வினவினுன் வெகு விநயமாக. அதற்கு விஸ்வாமித்திரன்,

அரியயான் சொலின் ஐய!
நிற்(கு) அரியதொன்
றில்லை
பெரிய காரியம் உள,
அவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனல் மருதம்
சூழ் மிதிலையர்
கோமான்
புரியும் வேள்வியும் காண்
டும் நாம் எழுக''

என்று போனுர்.

'அரிய காரியங்கள் என்று நான் சில காரியங்களைக் குறிப்பிட்டுச் சொன்னபோதிலும், ராமா, உனக்கு அரியது என்பதும் உண்டா?' என்று பதில்சொல்லும் முனி [illegible]

இராமாயண இரசிகமணி

### ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

(நல்லை ஆதீன கர்த்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மபமாகிஇருந்த என்பது ஆண்டுகளுக்குள் எத்தனையோ சைவசபைகள் தோன்றி, நின்று மறைந்து போயின. ஆனால் சைவபரிபாலன சபை தன்னலங்குன்றாது வளர்பிறையென நாவலர் பெருமான் காட்டிய வழி நின்று சைவத்துக்கும் தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் தளராது நின்று தொண்டாற்றி வருகின்றது. சபையின் முக்கிய பணிகள் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். (1) நீராவியடியில் பத்துப்பரப்பு நிலம் வாங்கி மணிமண்டபம் அமைத்து அதில் ஐந்தாங்குரவர் நாவலர் பெருமானின் திருவுருவப்படத்தை வரைவித்து வைத்து அதற்கு 'நாவலர் பெருமான் ஆச்சிரம மண்டபம்' எனப்பெயரிட்டு அவர் பெயரை இலங்கையில் அவருக்குப்பின் நிலைநாட்டியது.

2. அறுபத்து மூவர் குருபூசையைத் தவறாது நடத்துதல். நான்கு குரவர்களின் குருபூசைத் தினங்களிலும் மகேசுரபூசையும் விரிவுரைக்கூட்டங்களும் நடத்தி வருதல். சேக்கிழார் பெருமான், ஐந்தாங்குரவர் நாவலர் பெருமான், ஞானப்பிரகாச முனிவர் ஆகியோரது குருபூசைகளையும், நாவலர் பெருமானின் குருபூசையுடன் மகேசுரபூசையும் சிறப்பு விழாவும் நடத்தி வருதல்.

3. ஓதுவார்களைக் காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து தருவித்துத் தேவார திருவாசகங்களை முறையாகப் பண்ணுடன் பாடப் பயிற்றுவித்தல்.

4. புண்ணிய காலங்களில் சிவதீட்சை செய்வித்தல்.

5. சைவப்புலவர் பரீட்சை நடத்தி பரிசும் சான்றிதழும் வழங்குதல்

6. சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையை அமைத்து ஆங்கிலத்திலும் தமிழிலும் இரு சமயப் பத்திரிகைகள் நடத்தி வருவது.

இன்னும், ஞானப்பிரகாச முனிவர் வாழ்ந்த போராச்சியாரென்ற வளவில் முனிவருக்குக் கோவில்கட்ட அத்திபாரக்கல் நாட்டியுள்ள நற்பணியை ஒப்பேற்றுதல் இச்சபையின்முன்னுள்ள பெருங் கடமையாகும்.

ஐந்தாங்குரவர் நாவலர் பெருமானுக்குச் சிலையமைக்கச் சபை எடுத்த பிரயத்தனங்கள் ஒன்றும் சரிவர ஒப்பேருதபடியால், சிலை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் நாவலர்சபையுடன் ஒத்துழைப்பதும் சபையின் கடனுகும். நாவலர் பெருமானுக்குச் சிலையெடுக்கவேண்டுமென்ற விஷயம்

அன்பே சமயம். தூய உள்ளன்பிலன்றி புறச்சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை. உடல் சுத்தமும், உள்ளத் தூய்மையுமின்றி சிவபெருமானை வழிபடுதலில் பயனில்லை. சுத்தமான உடலுடனும், தூய்மையான உள்ளத்தோடும் சிவபெருமானை வழிபடுவோருடைய பிரார்த்தனைகளே செவிசாய்க்கப் பெறும். தூய்மையற்றவரும் பிறருக்குச் சமயபோதனை செய்ய முயல்கின்றனர்.

தன் வீட்டைவிட்டுக் கோவிலுக்குப் புறப்படும்பொழுது இருந்ததைவிட இன்னும் இழிந்தநிலையில்தான் ஆலயத்தினின்றும் வீட்டிற்குத் திரும்புகிறான். தீர்த்தமாடும் க்ஷேத்திரத்தில் அநேகபுனித வஸ்துக்களும் பரிசுத்தமான மக்களும் உறைகின்றனர். சாதாரணமான இடத்தில் புரிந்தபாவத்தை எளிதில் போக்கிக்கொள்ள முடியும். ஆனால் தீர்த்தஸ்தலம் ஆகிய புனித க்ஷேத்திரத்தில் புரி

...மற்ற யாதொரு பேதமுமின்றி ஓர் ஏழை மனிதனிடம்கடவுளைக்கண்டு அழைத்துச் சேவைசெய்து உதவிபுரிகின்றவன்தான் சிவபெருமானின் இன்னருளுக்குப் பாத்திரமாகிறான்.

சிவபெருமானுக்குச்சேவை செய்ய விரும்புகிறவன் அவனுடைய படைப்புகளாகிய உலகத்தில உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் சேவை செய்ய முற்படவேண்டும்.

ந்தோ அறியாமலோ மற்ற எவரைக்காட்டிலும், சிவபெருமான் பக்கலி லிருக்க அருகதையுள்ளவனுகிருன். அப்படியின்றி ஒருவன் சுயநலம் மிக்கவனுயிருப்பின் அவன் எல்லாக் கோவில்களுக்கும் சென்று க்ஷேத்ராடனம் செய்திருப்பினும், சிறுத்தையுடல்போலத் தன்னுடம்பு எல்லாம் நீறுபூசித் திலகம் தீட்டித்திரியினும், அவன் சிவபெருமானைவிட்டு வெகுதூரம் விலகியுள்ளவனே யாகிருன்.

லிட்டனவாம், பிணம்தின்ன வந்த கழுகு முதலியபறவைகளெல்லாம். அந்தப் பறவைப் பந்தலைக் கிழித்துக் கொண்டு இறங்கியதாம் ராமன் மீது தேவர்களின் பூமழை. அவ்வளவு மிகுதியாக அள்ளி அள்ளிச் சொரிந்து கொண்டேயிருந்தார்களாம் பூக்களை.

பந்தரைக் கிழித்தது
பரந்தபூமழை
அந்தர துந்துமி
அலையின் ஆர்த்தன
இந்திரன் முதலிய
அமரர் ஈண்டினர்
சுந்தர வில்லியைத்
தொழுது வாழ்த்தினர்.

தேவர்கள் பூமழை பொழிந்து ஜயபேரிகை கொட்டி

மரங்களும்
அலர் மழை சொரிந்த
முனியும் அவ்வழி
வேள்வியை
முறைமையின் முற்றி
இனிய சிந்தையன்
இராமனுக்(கு)
இணையன இசைந்தார்.

வேள்விஇனிது நிறைவேறியதால்விஸ்வாமித்திரன் உள்ளம் குளிர்ந்துபோயிற்று. அந்த இனிய சிந்தையிலிருந்து பிறக்கும் உபசாரமும் எவ்வளவோ குளிர்ச்சியாகப் பூமழை பொழிவது போலவே இருக்கவேண்டும் அல்லவா? வசீகரமான இன்னிசை மழை போலவே இருக்கவேண்டுமல்லவா?

புரியும் வேள்வியும் காண்டும் நாம் எழுக''
என்று போனுர்.

'அரிய காரியங்கள் என்று நான் சில காரியங்களைக் குறிப்பிட்டுச் சொன்னபோதிலும், ராமா, உனக்கு அரியது என்பதும் உண்டா?' என்று பதில்சொல்லும் முனிவன், ராமன் செய்யத்தக்க காரியங்களும் உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறுன். ஆனால் 'அவை முடிப்பது பின்னர்' என்று குறிப்பாகச் சொல்லிவிட்டு இப்போது அடுத்தபடியாக என்ன செய்யவேண்டும் என்பதை உடனே சொல்லுகிறுன்.

(தொடரும்)

வாழ்க்கையில் நிம்மதி

# பார்வையைத் தெளிவுபடுத்திக் கொண்டால் கடவுளை யாரும் காணலாம்

## நம்மை நாமே ஏமாற்றலாமா?

5

இறைவன் இறைவன் என்று சாதாரணமாக எல்லோரும் கூறுகிறேம், ஆனால் இறைவனைக்கண்டவர் யார்? இறைவன் என்று ஒருவன் இருப்பதை நிருபிக்கமுடியுமா?

'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்று ஒரு இனிய மோனீச்சொற்ருெடர் வழக்கில் இருக்கிறது. இதில் சந்தேகம்இருக்க வேண்டியதில்லை. ஏனெனில் இறைவனை நிச்சயமாகக் காணமுடியும். கண்டவர்கள் இருக்கிறுர்கள் கண்டவர்கள் விண்டும் இருக்கிறுர்கள்.

பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணர் அவர்கள் மிகஅழுத்தம் திருத்தமாக இதைக் கூறியிருக்கிறுர்கள். ''கடவுளை நான் கண்டிருக்கிறேன். நீயும் காணமுடியும். அதுமட்டுமல்ல, நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளைக்காணமுடியும்'' என்றுர் அவர்.

கடவுள்எமது பார்வைக்கு எட்டியதூரத்திலேயே இருக்கிறுர். அவரைக் காணும் அளவுக்கு நமது பார்வையைத்தெளிவுபெறச் செய்ய வேண்டும். அவ்வளவுதான்.

கடவுள் எங்குஇருக்கிறுர்? அவர் வேறு எங்கும் இல்லை. நமதுஉள்ளத்திலேயே இருக்கிறுர். மனிதனின் உள்ளம் என்பது மகத்தான, புனிதமான தெய்வீகமான ஓர் இடம். ஆன்மா என்றுசொல்லப்படும் உயிர் நிலையத்தின் உயர்ந்தபீடம் உள்ளம். இறைவனுக்கு இதைவிடச் சிறந்த கோயில் வேறு இருக்கமுடியுமா? எனவே இறைவன் நமது இதயத்திலேயே வாழ்கிருன் என்பதை நம் நிச்சயமாக நம்பலாம்.

இறைவன் இதயத்தில் வாழுவதனுல் எந்த உருவத்தில் வாழமுடியும்? எந்த உருவத்தில் அவரை நாம் தரிசிக்கமுடியும்?

— திருமதி பார்வதி நாகலிங்கம் —

சத்தியத்தின் உருவத்தில் மனச்சாட்சியின் உருவத்தில் இறைவன் இதயத்தில் வாழ்கிருன். இந்த உருவத்திலே தான் நாம்அவரைத்தரிசிக்க முடியும். மகான் காந்தி சத்தியமே கடவுள் என்று கூறியிருப்பதை நாம் இங்கு நினைவுகூருவோம். சத்தியம், உண்மை, இவற்றின் மறு உருவமே இறைவன். எந்தக் காரியத்தையும்நாம் செய்ய முனையும்போது இதயத்தின் அடித்தளத்தில் இருந்து ஒரு குரல் கேட்குமல்லவா? அது தான் இறைவனின் குரல்; மனச்சாட்சியின் குரல், ஒவ்வொருஇதயத்திலும் இந்தக் குரல்ஒலிக்கவே செய்கிறது. ஆனால் அவ்வப்போது நமது கண்ணை மறைக்கும்சுயநலப் பொருமை அகந்தை ஆத்திரம் என்பன அக்குரலை அமுக்கிவிடுகின்றன.

ஒரு காரியத்தை நாம் செய்ய முனையும்போது உள்மனம் ஒன்று கூற வெளிமனம்ஒன்றுசெய்யத்தூண்டினுலிறைவனின் கட்டளையை நாம் மீறுகிறேம் என்பது தான் அர்த்தம். நாம் செய்வது யாருக்கும் தெரியவில்லையென்று நினைப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். எனவேதான் வள்ளுவப் பெருந்தகை 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்று கூறினுர்.

தன்னெஞ்சறிவது பொய்த்தால் என்ன ஆகும்? வாழ்க்கையில் நிம்மதி போய்விடும்.

''தன்னெஞ்சறிவது
பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே
தன்னைச்சுடும்''

எந்தச் சித்திரவதையையும் தாங்கிக்கொள்ளலாம். ஆனல் மனச்சாட்சியின் சித்திரவதையை மட்டும் பொறுத்துக்கொள்ள முடியாது. மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பதனுல் மனநிம்மதி குலைவது மட்டுமல்ல இறைவனின் ஆக்ஞையை மீறுவதற்கான தண்டனையையும் நாம் பெற்றே ஆகவேண்டும். தவறு செய்யும் குழந்தையைத் தண்டிக்கும் பெற்றேர் போன்று இறைவனின் ஆக்ஞையை மீறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவன் நம்மைத் தண்டிக்கவே செய்கிருன். ஒருமுறை செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாமல் நாம் இறைவனை நேருக்கு நேர் பார்க்கவே முடியாது. இப்படியான தவறுகள் பல தொடர்ந்து நடக்க இடம் கொடுத்தால் இறைவனைவிட்டு நாம் விலகி விலகிப் போகிறேம் என்றுதான் அர்த்தம். இப்படி வெகுதூரம் போய்விட்டால் பிறகு இறைவனை நாம் நெருங்க முடியாமலே போய்விடும்.

இதிலிருந்து வாழ்க்கையில் நிம்மதி குலைவதற்கு முக்கிய காரணம் தன்னெஞ்சறிவது பொய்ப்பதுதான் என்பது விளங்கிவிடும்

''உனக்கே நீ உண்மையாயிரு'' என்பது ஷேக்ஸ்பியர் மொழி. நாம் வேறு யாருக்காகவேனும் உண்மையாக நடக்கவேண்டியதில்லை, நமக்காகவே. நமது ஆத்ம திருப்திக்காகவே, நம்மை நாமே மகிழ்விப்பதற்காகவே நாம் நமக்கு உண்மையாக நடக்க வேண்டியது அவசியம்.

மனச்சாட்சியை மதித்து உண்மைக்கு உண்மையாக நடப்பதில் நமக்குப் பலவித அனுகூலங்கள் இருக்கின்றன.

ஒரு பொய் சொல்லிவிட்டால் அதற்கு அனுசரணையாக ஒன்றைத் தொடர்ந்து மற்றென்றுகப் பல பொய்கள் சொல்லவேண்டி நேரிடும். அதனுல் எந்தப் பொய்யை எப்போது

(5ம் பக்கம் பார்க்க)



# ஆசிரிய தலைவர் அதிபர் திரு. சுவாமிநாதன்

அதிபர் திரு. சுவாமிநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவப் பிரபுக்களில் சிறந்தவர். ஆசிரிய உலகத்துச் சிறந்த வழிகாட்டியாகவும், அதிபர்களுக்கெல்லாம் சிறந்த அதிபராகவும் திகழ்ந்த பெரியாராவார். அவரை நினைக்கும் போதெல்லாம் கனக தண்டிகைக் கனகராய முதலியும், வில்வராய முதலியும், பாண்டிமழவரும் யாழ்ப்பாணச் சைவப்பிரபுக்களும் மனக்கண்முன் வருவார்கள். யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களுடைய சபையில் வீற்றிருந்த அந்தச் சைவப்பிரபுக்களின் பெருமையெல்லாம் அவரின் தோற்றப்பொலிவும், கெம்பீரமும், நடையும் உடையும், பேச்சும், தொனியும், புன்சிரிப்பும் பாவனைகளுமாகி மிளிர்ந்தன.

அவருக்குச் சமயத்திலிருந்த தீவிரபக்தியும், வைராக்கியசித்தமும், இந்தியாவில் தலைசிறந்து இந்துமகாசபை தலைவர்களான வீர சவர்க்கார், பண்டித மாளவியா, டாக்டர் முன்ஷி போன்ற பெரியோர்களை ஞாபகப் படுத்தின. சைவத்தமிழ் உலகுக்குச் சிறந்த பாதுகாவலனுகச் சைவத் தமிழாசிரியர்களைப் பயிற்றிக்கொடுத்து கால் நூற்றுண்டுகள் கடும்பணியாற்றியதைசைவ தமிழுலகம் மறக்கமுடியாது சைவ ஆசிரியர்கள் மத்தியில் அதிபர், உபஅதிபர், பண்டிதமணி என்ற சொற்கள் அழியாவரம் பெற்றுவிட்டன. திருநெல்வேலிச் சைவாசிரியர் கலாசாலை, சைவத் தமிழுலகத்தால் உச்சிமேல் வைத்துப் போற்றப்பட்டதை யாரும் மறந்திருக்கமுடியாது. உயர் திரு சுவாமிநாதன் அதிபரின்

இ. கந்தையா பி. ஏ.
(தலைவர், அ. இ. த. ஆசங்கம்)

சைவத் தமிழரசுஒன்று திருநெல்வேலி பனந்தோப்பில் நிலைபெற்றுத்திகழ்ந்தது. சக்கரவர்த்தித் திருமகன் போலத் திகழ்ந்த சிற்றரசனுக்கு வசிட்டமுனிவரும் சுமந்திரனும் போல இரு பெரியோர்கள் பக்கபலமாக இருந்தமை இன்று சரித்திரமாகிவிட்டது.

தமிழாசிரியர்கள் என்றவுடன் குமிழி மிதிதடி, பஞ்சகச்சம், உத்தரீயம், திரிபுண்டரம், மூக்குக்கண்ணுடி உச்சிக்குடுமி போன்ற அலங்காரங்களையும், பணிவுடன் அடிவருடுதல், இச்சகம் பேசுதல் ஆதியாங் குணங்களையும் எதிர்பார்த்த ஆங்கிலேயநாகரிகத்தில்திளைத்த அந்த அந்நியர் ஆட்சிக்காலதிலே, வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திற்குத் தலைவராகவும், ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தை நடத்துபவராகவும், சைவாசிரிய கலாசாலை அதிபராகத் திகழ்ந்த நமது பெரியார் ஒரு தனித்தன்மையுள்ள ஆசிரியப் பெருந்தகையாகவும், தலைவனுகவும், சிறந்த ஒரு கலங்கரை விளக்கமாகவும் சபைகளில் பொலிந்து விளங்கினுர்.

அதிபர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஆஜானுபாவரான தோற்றமுடையவர். அகண்ட நெற்றியும், பாரிய மீசையும், மிடுக்கான எடுப்பான தோற்றமும், சிம்மத்தொனியும் கண்டார்ப் பிணிப்பதாய், காணுதாரும் அறிந்து மதிப்புக்கொடுக்க உதவின. ஆயிரத்துக்கு மேற்பட்ட சைவத்தமிழாசிரியர்களைப் பயிற்றுவித்துச் சைவத்தமிழ் விருத்திக்கு உதவியதுடன் ஆசிரியர்களுடைய இடுக்கண் களைந்து கைகொடுத்து உதவியுமுள்ளார்கள். கடமைகளைக் கண்ணுகப் போற்றியதுடன் உரி

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# உப்பு

தையிட்டி அ இராசதுரை

"தங்கச்சி தவம்... அண்ணருங்கை இல்லேயோ" என்று தனக்கே உரித்தான பெரிய தொண்டையில்குரல் வைத்தபடி விறுவிறென்று தனது தமையனார் முருகுவின் வீட்டிற்குள் நுழைந்தாள் ஆச்சிப்பிள்ளை.

குசினி விறுந்தைத் தூணோடு தனது மருமகள் தவராணி முழங்காலிரண்டிலும் முகத்தைப்புதைத்தவளாக கூனிக்குறுகிக்குடங்கியிருந்தபடி சத்தமிட விம்மல் பெருமலெடுத்து அழுது கொண்டிருப்பதையும், குசினிவிறுந்தை ஏகலும் கிள்ளிப்பிடிக்கவும் இடமில்லாதபடி சோற்றுக்கோப்பையோடு சோறெல்லாம் சிந்திச்சிதறிக்கிடப்பதையும் பார்த்து ஆச்சிப்பிள்ளை அப்படியே ஏங்கி விறைத்து மலைத்துப்போய் விடுகின்றாள்.

"...தங்கச்சி தவம்........ தவம்.. இதென்னப்பா...... இதென்ன...... இதென்ன.... எனக்கொண்டும் விளங்கேலையணை... ஏனுத்தை அழுகிறுய்...மெய்யே...? இப்ப என்ன புதினமான சங்கதியப்பா இந்த வீட்டிலை மின்னைமல் முழங்காமல் நடந்து முடிஞ்சது? என்னண்டு சொல்லடிபிள்ளை...... சொல்லடிபிள்ளை. என்னடிதங்கச்சீ ஆய்க்கினேக்கேவாய்திறந்து ஒருகோதாரியும்பேசாயாம். அழுகிறதைவிட்டுப்போட்டுச் சொல்லு பிள்ளை. இதென்னடி அப்பா... அப்பிடிக்கி உன்றை மாமி அறியக்கூடாத விசயமோ... இதேன் சோத்தையெல்லாம் ஆரோ விஷமத்துக்குச்செய்த கணக்காக வீடு முழுக்க கொட்டிச் சிந்திவிட்டிருக்கு. நீயும் விடன்தொடேண்டு அழுதுகொண்டு கிடக்கிறுய். இதெல்லாம் என்ன கூத்தப்பா...... என்னகூத்து... இதென்னடிபிள்ளை அதென்னண்டு சொல்லிப்போட்டாவது... பிறகிருந்து நல்லவடிவாய் அழன்...

"இஞ்சைவிடு இஞ்சைவிடு, இதிலை உன்னேனடயிருந்து மாரடிக்கிற நேரம்" ஆற்றுமல் எழுந்தவளாக ஆச்சிப்பிள்ளை மருமகளோடு விசைத்தபடியே மன அந்தரப்பட்டு கிணற்றடிப்பக்கமாக சும்மா மனம்போன போக்கில் நடந்தபோது தனது மருமகன் நவநீதன் கிணற்றுக்கட்டுக்குமேல் சோர்ந்து குருவிப்போய் தான் வந்ததைக்கூடக் கவனிக்காமல் எதையோ பறிகொடுத்தவன்மாதிரியாக எங்கோ பார்த்தபடி அதிகமாகமூளையைவிட்டு யோசித்துக்கொண்டிருப்பதைக் கண்டு இவனுக்கும் தமக்கைக்குமிடையிலே தான் ஏதோ தகராறுநடந்துமுடிந்திருக்கவேண்டுமென்று தனக்குள் ஊகித்துக் கொண்டு "டேய் நவம்!" என்று 'உறுக்காட்டி'யமாகக் கூப்பிட்டதும்... அப்படியே திடுக்குற்றுத் திணறிகிணற்றுக்கட்டிலிலிருந்து தவறி, இருபத்தியேழு, இருபத்தியெட்டு முழஆழக்கிணற்றுக்குள்தொப்பென்று விழுந்துவிட்டவன்போல் திகைத்துத் தடுமாறி மாமியாரின் முனல் மரியாதையாக எழுந்து நின்றுன் நவநீதன்

"டேய் நவம்... இண்டைக்கி வீட்டிலை என்னடா நடந்தது? உள்ளதைச் சொல்லு!!"

"...அது மாமி.. மீன்குழம்பு தையாத்தை நடந்த புதினங்களெல்லாத்தையும் வடிவாய் நானறிஞ்சிட்டன்...சீ ...இதென்ன வெட்கம் கெட்ட அழுகை... அதுக்கென்ன பிள்ளை...மிதிச்சடத்துப் புல்லும் சாகாதமுறையிலை உங்களோடை இவ்வளவு காலமாய் நடந்துவந்த உங்கடை அப்புதானே இண்டைக்கு இப்பிடிப் புதினமாய் நடந்தார்... பிதாமாதாவிட்டை ஏச்சு வாங்கிறதுக்குக்கும் அடிவாங்கிறதுக்கும் நாங்கள் தவம் பண்ணவேணும். தங்கச்சீ... பெரிய ராசாவின்றை குடும்பத்துள்ளேயும்கூட இப்பிடிக் கோளாறுகள் நடக்கிறதுதானே.. அதெங்கையும் தான் நடக்கிற வழக்கம்.. இப்ப... எடிபிடியெண்டு ஏசின வாயாலை... பேந்தொரு நேரம்.. தங்கச்சீ... ராசாத்தியென்று அப்பு கூப்பிடமாட்டாரோ, மெய்யே" என்றெல்லாம் மருமகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறலாஞள். இவ்வாருக ஆச்சிப்பிள்ளை எவ்வளவோ சமாதானப்படுத்தியும் ஒரு வழிக்கும் கட்டுப்படாமல் மருமகளின் அழுகையும் இன்னுமின்னும் கூடிக்கொண்டு போகவே.. மருமகளுக்குப் புத்தி சொல்லப்போய் வாயும் மனமும் அலுத்துக் கொண்ட ஆச்சிப்பிள்ளை ஏதோ நினைத்துக்கொண்டவளாக அடுப்படிக்குள் எழுந்து சென்று பார்க்கிருள் பார்த்துவிட்டு மறுபடியும் குரலெழுப்புகிருள்.

'இங்கேபருங்கோவன் விளையாட்டின்றை மாதிரியை... கறிச்சட்டி எல்லாம் அந்தப்படிய திறந்தது திறந்தபடியே கிடக்கு, இம்மட்டுக்கு பல்லிகில்லிகூட எச்சமிட்டிருக்கும்" என்று மலாரடித்துக்கொண்டவளாய் ஆச்சிப்பிள்ளை அகப்பையை எடுத்து மீன்குழம்பில் ஒரு சிறிது கிள்ளிக் கையில் விட்டு மீன்குழம்பிற்கு உப்புக்காணுமோ...காணுதோ.. என்று தனது நாவென்ற ருசிக்கருவியினுல் உப்பு மதியம் பார்க்கும் எண்ணத்தோடு கையிலுள்ள மீன் குழம்பை நாக்கில் தடவிப் பார்த்துவிட்டு ... "பிள்ளை பாருங்கோவன் அண்ணற்றை மாதிரியை... மீன்குழம்புக்குள் உப்பு நல்ல கணக்காய் உறைக்குது... பாக்குவெத்திலை சுருட்டொண்டும் பாவியாத அண்ணற்றை நாக்கு ... இருந்தாப்போல மரக்கட்டை பத்திப்போச்சுதோ" என்று தவராநாய்மாதிரி அலமலக்கிற நிலைதான் இந்த வீட்டிலை உள்ளவைக்கு வரும்" என்று மனம் பொறுக்காமல் வாய் பொருமியபடி ஒரு சோற்றவிளாவது மிதித்து விடக்கூடாதென்ற பொல்லாத பயபக்தியோடு சிந்துண்டு சிதறுண்டு கிடந்த சோற்றுப் பருக்கைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் வடிவாகக்கூட்டி அள்ளி வெளியில் நின்ற கோழிகளுக்குப் போட்டுவிட்டுத் துண்டுதுண்டாக உடைந்து கிடந்த பீங்கான் கோப்பையை கூட்டி அள்ளி ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைப்பதற்காகக் கைகொண்டு போன ஆச்சிப்பிள்ளையின் உள்ளமும் உடலும் நடுங்கிப்பதறி ஒருநிலை கொள்ளாது தாக்கவே பூமியதர்ச்சி கண்டதுபோல மூளைக்கு மெத்த .வேலையும் கொடுத்து விடுகின்றன. ...... அண்ணருக்கும் இந்த மாக்கோப்பைக்கும்ஒரே வயது .. அண்ணர் பிறந்தபோது எடுத்த இந்த மாக்கோப்பைக்கும் இண்டைக்குத்தானே இந்தப் பொல்லாத விதிவரக் காத்திருந்தது...? ஒரு காலமும் இந்த வீட்டிலை நடவாத புதினங்களெல்லாம் இண்டைக்கு நடக்குது... தாயே காளியாச்சீ... நானொண்டும் அறியேன்..." என வாய் புலம்பிய ஆச்சிப்பிள்ளை பீங்கான் கோப்பையாக உடைந்து சிதறிப்போன உள்ளத்தோடு என்னவோ ஏதோ என்று பெரிதாக நினைத்து பயந்து செத்தாள். உடைந்துபோன அந்தப் பீங்கான் கோப்பையின் அத்தனை துண்டுகளையும் பொறுக்கியெடுத்து ஒரு மூலையில் போட்டுவிட்டு... "தங்கச்சீ... நீ அழாதை... இண்டைக்குக் கொப்பருக்குச் சாப்பாடு நான்தான் போட்டுக் குடுக்கவேணும். அப்போதைக்குக் கறிக்குள் உப்புக்காணுமோ காணுதோவெண்டு கேட்டுப்போட்டுக் குடுக்கிறன் சரியான மறுமழி... நீ அழாதை தங்கச்சீ... எல்லாத்துக்கும் முதல் நான் வீட்டுக்கொருக்கால் போட்டோடி வாறன்" என்று சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாக வீட்டுப் பக்கம் போய்விடுகிருள்.

ஆச்சிப் பிள்ளை மாமி போனவுடனே தவராணி இருக்கிற மனச்சலிப்புக்கெல்லாம் நல்லாக அழுது தீர்க்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அடிவீட்டிற்குள் விறுவிறென்றுபோய்ப் படுத்து விடுகிருள். தனக்குள் பெரும் பிரளய காலத்... வலிந்து வலிந்து விம்மழைத்துக் கொண்டிருந்தாள்... "சீ... உவனுமொரு

## கந்தமுருகேசனர் கனவு- நம் நினைவு!

—கவீ—

இராகம்: சாமா தாளம்: ஆதி

பல்லவி

கந்தமுரு கேசன் தமிழ்க்கனவு-நம்
சிந்தை யினித்திடும் தமிழ்நினைவு!

சரணம்

கொந்திய மாங்கனியின் சுவைபார்த்தோம்
கோடிய கொம்புத்தேன் வதைசேர்த்தோம்
சிந்திய பருக்கையிலும் பசிதீர்த்தோம்
செந்தமிழ்க் கந்தனில்லம் தினம்ஆர்த்தோம்!
(கந்த)

வாதநெறி யாலெம்மை வளைத்துவிட்டார்
வாதநெறி யாலவரும் வளைந்துவிட்டார்
போதமலை யுச்சியிலே ஏற்றிவைத்தார்
புகழ்மலையி லேயவரும் ஏறிவி டார்! (கந்த)

நுள்ளிநுள்ளித் தந்தபிச்சை தமிழ்ச்செல்வம்
நொந்தவரை இனிக்கவைக்கும் தமிழ்வெல்லம்
தெள்ளித்தெள்ளித் திண்ணையிலே தினந்தந்த
தேமதுரத் தமிழோசை திக்குஎட்டும்! (கந்த)

நாற்புறமும் கொங்கிறீற் மதில். நடுவே நவீன அமைப்பில் வீடு. வீட்டுக்காரருக்கு கம்பெனியொன்றில் வேலை.

அந்தப்பெரிய புயலில் அந்த வீடு தப்பியதுஅதிர்ஷ்டம்தான். வீட்டுத்தாழ்வாரத்தில் நின்ற தென்னைமரம் புயலின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது சாய்ந்தபோது வீட்டின்மேல் விழுந்திருந்தால்...? தலைபோகிற ஆடத்தில் தலைப்பாகை போனமாதிரி, தென்னை சாய்ந்து மதிலில்மட்டும் சிறிது சேதமேற்படுத்தியது. அடியிலிருந்து மேல்வரைக்கும் மதிலின் சிறுபகுதி துண்டாகப் பிளந்து பெயர்ந்துவிட, ஊடே தென்னை படுத்துக்கொண்டது.

## குட்டிக்கதை

வீட்டுச்சொந்தக்காரரான கந்தசாமி அதே தினமே மதிலில் ஏற்பட்ட ஓறுவாயை அடைத்துவிடவேண்டுமென்று கருதியபோதிலும் 'இப்போதென்ன வந்துவிட்டது. ஊரெல்லாம் வீடுகளுக்கும் விவசாயத்துக்கும் இத்தனை பெரிய சேதம் ஏற்பட்டுள்ளபோது, நிச்சயமாக அரசாங்கம் நிவாரணம் வழங்கும்தானே. இவ்வித கஷ்டநிலையில் மக்களுக்கு உதவவில்லையாஞல் அரசாங்கமென்ரென்றிருப்பதால் என்ன பிரயோசனம்? வசதியிருந்தபோதிலும் பத்துப்பேரிலொன்ருக நமக்கும் கிடைப்பதுகிடைக்கட்டுமே' என்றிருந்துவிட்டார்.

அவர் நம்பியது முற்றிலும் சரியே. நஷ்டஈடு கொடுக்க அரசாங்கம் முன்வந்தபோது, கந்தசாமியும் தனக்குப்புயலினுல்ஏற்பட்ட சேதத்தையும் நஷ்டஈடு பெறுவதற்குத்தாம் தகுதியானவர் என்றும் குறிப்பிட்டு விண்ணப்பித்திருந்தார்.

மதில் இன்னமும் பிரிந்து போய்க்கிடந்தது.

# மனிதர்கள்

அயலிலுள்ள கோழிகளுக்கும் குஞ்சுகளுக்கும் இந்தக் கண்டாயம் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்து விட்டது. கந்தசாமிக்கும்தன். இதற்கு உடந்தை கந்தசாமி வீட்டுக் கோழிகள்.

கந்தசாமி வீட்டுக் குசினிப்பக்கம் கோழிகளுக்கு நிறையத் தீனி கிடைத்து வந்தது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கு கந்தசாமி குடும்பம் விலக்காயிருந்ததும் அவர்களுக்குப் புதிதாக வந்த வேலைக்காரியும்தான் இதற்கு முக்கிய காரணம். நாளாகஆக எல்லாக் கோழிகளுக்குமே கந்தசாமிவீடே சொந்தமாயிற்று. நிறைய முட்டைகள் கிடைத்தன. சிலநாள் குஞ்சுகள் அவர் அடுப்பில் ரசமாயின. கோழிக்காரர் என்னதான் முயன்றும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இப்படியிருக்க ஒருநாள் அந்தவழியாக இரு ஆடுகள் தடையின்றி உட்சென்று சிலநாள் முன்னர்தான் நாட்டியிருந்த மாங்கன்றுகளை நறுக்கிச் சப்பிவிட்டன. இது யாருக்கும் தெரியாமல் நடந்து விட்டது. அவர்களது சின்னமகன் காட்டிக்கொடுத்தபிறகுதான் அம்மா ஆடுகளை விரட்டி விட்டாள்.

காரியாலயத்திலிருந்து மாலையில் வீடு திரும்பிய கந்தசாமிக்கு விஷயம் தெரிய வந்ததும் அவர் ஒரு தீர்மானமான முடிவிற்கு வந்தார். 'நஷ்ட ஈட்டை' அரசாங்கம் எப்பவேண்டுமானுலும் கொடுக்கட்டும். முதலில் சொந்தச் செலவிலேயே மதிலைக்கட்டி விடவேண்டும், எனத் தீர்மானித்ததுதான், அடுத்தநாள் சூரியோதயத்திற்கு முன்னரே விஷயம் முடிந்துவிட்டது.

வழக்கம்போல் மாலையில் வீடு திரும்பிய தன் கணவனுக்கு, சிரித்துக்கொண்டே அவர் மனைவி ஒரு செய்தி சொன்னுள்: 'தகப்பனும் பிள்ளைகளும் இனிமேல் கோழிமுட்டை சாப்பிடுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். இன்று முழுநாளும் வெளியேயிருந்து ஒரு கோழியும் இந்தப் பக்கம் தலை காட்டவில்லையே.'

சற்று நேரம் சாய்மனைக் கதிரையில் யோசித்தவாறே கிடந்த கந்தசாமி, மதில்

சசிபாரதி

சுவர் கட்டிய அந்த மேசனிடம் சென்று 'இங்கேபார் நடராசா, நாம் கொஞ்சம் புத்தியீனமாக நடந்து கொண்டோம். நீ கட்டிய நமது மதில் சுவர் இருக்கிறதே, அதில் அடியிலே இரண்டு கற்களைப் பெயர்த்து எடுத்துவிடு. துவாரம் சற்றுப் பெரிதாயிருப்பதைப் பற்றிப் பரவாயில்லை. வெள்ளம் வெளியே வடியவேண்டாமா' என்று சொல்லிவிட்டுத் திரும்பினர்.

அடுத்தநள் மாலையில் அவர் காரியாலயத்திலிருந்து திரும்பியபோது மனைவி தன் கண்கள்மூலம் சைகைகாட்டிச்சிரித்தாள். அவள் குறிப்பையுணர்ந்து குசினித்தாழ்வாரத்தை நோக்கிய கந்தசாமி தம் இதழ்க்கடையில் ஒரு புன்னகையை இழையவிட்டபடி போய் சாய்மனையில் சாய்ந்துகொண்டார்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் போலி அரசியல் வாதிகளிலும் பார்க்க ஆக்கப்பணி புரியும் கவிஞன் தரங் குன்றியவனு?

# பத்திரிகைகளில் கவிஞர்கள்

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்து புதுத் தெம்பையும், புத்துணர்ச்சியையும் ஊட்டி மறு... பான உண்மையை மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்கத் தான் வேண்டியிருக்கிறது. கவிஞனும் உரிமைக்குரல் எழுப்பவேண்டித்தான் இருக்கிறது.

பிற்பாடு 'இன்ன' கவிஞரின் தலைமையிலே கவியரங்கம் நடைபெற்றதென்று எங்கோ ஒரு ஒதுக்குப்புறத்திலே மிகமிகச் சிக்கனமாகச் சில இதழ்களில் செய்தி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

நுள்ளிநுள்ளித் தந்தபிச்சை தமிழ்ச்செல்வம்
நொந்தவரை இனிக்கவைக்கும் தமிழ்வெல்லம்
தெள்ளித்தெள்ளித் திண்ணையிலே தினந்தந்த
தேமதுரத் தமிழோசை திக்குளட்டும்! (கந்த)

★

## தொண்டினைத் தொடருவோம்

**காரை. செ. சுந்தரம்பிள்ளை—**

பணத்தினைப் பெற்றோ ரெல்லாம்
பகுத்துண்டு வாழ்வ தில்லை
குணத்தினில் மிக்கோர் கூடக்
கொடுத்திட லின்மை கண்டோம்;
மணத்தினைப் பரப்பும் தூய
மல்லிகை மலரைப் போன்றும்
கிணற்றினில் நீரைப் போன்றும்
கிளர்ந்தெழு பரிதி போன்றும்;

அரைத்திட அரிய வாசம்
அளித்திடும் சாந்தம் போன்றும்
தரையினில் தமிழை யூட்டித்
தம்புகழ்நிறுவிக் கொண்டோர்
ஒருசிலர்; அவர்கட் குள்ளே
உடல்பொருள் ஆவி யாவும்
விருப்புடன் தமிழுக் காக
விதைத்தவோர் தெய்வ முண்டே.

புலோலியில் வாழ்ந்த தெய்வம்
பொன் பொருள் மீது ஆசை
இலாதவோர் பெரிய தெய்வம்
இலக்கிய விலக்க ணத்தை
நிலாவொளி பரப்பல் போல
நித்தமும் தந்த தெய்வம்
கலாநிதி யான தெய்வம்
கந்தமுரு கேச தெய்வம்.

[illegible] நின்றான் நவநீதன்

"டேய் நவம்... இண்டைக்கி வீட்டிலே என்னடா நடந்தது? உள்ளதைச் சொல்லு!!"

"...அது மாமி.. மீன்குழம்புக்கு உப்புக்காணாதெண்டு அப்பு அக்கா வோடை சண்டைபிடிச்சு.. அக்காவை ஏசி. . சோத்தையெல்லாம் கோப்பையோடு தூக்கிக் கொட்டிப்போட்டு எங்கேயோ வெளிக்கிட்டுப் போட்டாரணை" என்று நவநீதன் கோர்ட்டில் சாட்சிக் கூண்டில் நின்றபடி நீதிபதிக்கு முன்னால் சாட்சியமளிப்பவன் போல் கூறிமுடிக்கிறான்.

"ஓ...அப்படியோ புதினம்" வாய்வீச்சாக சொல்லிக்கொண்ட ஆச்சிப்பிள்ளை -இப்ப...எங்கடையிந்த அண்ணருக்கு வந்த விசரென்ன இப்ப மச்சாள் செத்தும் சரியாய் இந்த மாசியோடை பத்துவரிசமும் முடியப் போகுது. இந்த இவ்வளவு காலமும் மகள் காய்ச்சிமூட்டிக்குடுக்கிறதை அடுத்த இரண்டாம் கதையும் கதைக்காமலுக்கு கண்ணை மூடிக்கொண்டு வாங்கி வாய்க்குள் வைச்சிட்டுப்போற மனிசன்... இண்டைக்கேன் தெரியாப் புதினமான கோபம் கொண்டுதோ" என்றெல்லாம் தனக்குள்ளாக கிணற்றடியில் நின்றபடி பெரிய மனக்குழப்பத்தோடு யோசித்து முடித்துவிட்டு மறுபடியும் விறுவிறென்று திரும்பிவந்து ...'தங்கச்சீ தவம்... அழாம்புக்குள் உப்பு நல்ல கணக்காய் உறைக்குது... பாக்கு வெத்திலை சுருட்டொண்டும் பாவியாத அண்ணற்றை நாக்கென்ன இருந்தாப் போல மரக்கட்டை பத்திப் போச்சுதோ" என்று தவராணிக்குக் கேட்காமலே தனக்குள் சரிபிழை பேசிவிட்டு... அடுப்புக்கட்டில் இருந்த உப்புக்குட்டானைத் தேடி எடுத்து அதற்குள் மருந்திற்கும் ஒரு உப்புத் துகளாவது இல்லாமல் வழித்துத்துடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு..."உப்பினருமை உப்புச் சமைந்தால் தெரியும்... அப்பனருமை அப்பன் சமைந்தால் தெரியும்" அந்த நேரத்துக்குப் பொருத்தமாக ஒரு பழமொழியும் சொன்னாள். அதன் பின் திறந்து கிடந்த கறிச்சட்டிகளை பக்குவமாக மூடிவைத்துவிட்டு குசினிவிறுந்தைக்கு வந்துவிடுகின்றாள்...

"இந்தப் பொல்லாத அரிசி விலையிலை ஒரு சோத்தவிள் கிடையாமல் சனங்கள் தவிச்சுவாறதவிப்புக்குள்.. இங்கை பாரன்..அன்னத்தையெடுத்து திமிர் பிடிச்சாப்போலை கால்வழிய மிதிபடக்கூடியதாக இந்தத் தேசமெல்லாம் சிந்திச் சிதறவைச்சுக்கிடக்குது .. இந்த அநியாயத்துக்கு... இக்கணம் ஒரு சோத்தவிழ் ...எங்காலை வருமெண்டு

[illegible] விறுவிறென்றுபோய்ப் படுத்து விடுகிறாள். தனக்குள் பெரும் பிரளய காலத்தையே வலிந்து வலிந்து வரவழைத்துக் கொண்டிருந்தாள்... "சீ... உவனுமொரு வெட்கங்கெட்ட பிதா... உவன் செத்துச் சாம்பலாய்ப் போனாலும் என்ர மன ஆத்திரம் கடைசிவரைக்கும் தீராது... உவன் காரிலை லொறியிலை அடிபட்டுச் சாகவேணும்... யாழ்தேவியிலை அடிபட்டுச் சாகவேணும்... புடையன் பாம்பு நாகபாம்பு நாலு பல்லாலும் வெட்டிச் சாகவேணும்... கோடாலியாலை மண்டையிலை கொத்துவாங்கிச் சாகவேணும்... உவன் செத்தாலும் கடைசிவரைக்கும் ஒரு கொஞ்சமும் கவலைப்படவே மாட்டேன். ...ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடமாட்டன்... உவன் செத்துத் துலையவேணும்... அதைப்பார்த்து நான் நல்ல வடிவாய்ச் சிரிச்சுச் சந்தோஷம் கொண்டாடவேணும்" என்று இப்படியெல்லாம் பெற்ற தகப்பனின் பிணத்துக்கு மேலால் ஏறிமிதித்து நடப்பவளை போல் சொல்ல முடியாத மன வன்மத்தோடு மண் வெட்டியெறிந்துகொண்ட தவராணி... திடீரென்று ஒரெண்ணம் பயங்கரமாக

(4-ம் பக்கம் பார்க்க)

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்து புதுத் தெம்பையும், புத்துணர்ச்சியையும் ஊட்டி மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து நிலைநாட்டி நாட்டுக்கும் மக்களுக்கும் புது வாழ்வளிப்பவன் கவிஞன்.

உயிரோட்டமுள்ள கவிதைமூலம் ஆக்கப்பணியாற்றும் சமுதாயத்தின் உயிர்நாடி கவிஞன். எனவேதான், இக்காலத்தில் எந்த இலக்கிய விழாக்களிலும் ஏன், அரசியல் மாநாடுகளிற்கூட 'கவியரங்கம்' ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அமைந்ததுபோலும்.

எத்தகைய பிரதிபலனுமே கருதாமல் உண்மையான பொதுநலத் தொண்டாற்றும் சமூகச் சிற்பியாகிய கவிஞனுக்கு.

பத்திரிகைகள் வாயிலாக படித்தவர்கட்கும், கவியரங்கங்களின் மூலமாகக் கல்லார்க்கும், கற்றோர்க்கும் எல்லோர்க்கும் நல்லுணர்வுகளைத் தூண்டி சிந்திக்க வைத்து அவர்கள் மனதிலே சீரிய கருத்துக்களையும் சிறந்த பண்பாடுகளையும் ஆழப் பதியவைக்கும் கவிஞனுக்கு பத்திரிகைகளில் உரிய இடம் கொடுக்கப்படவில்லையென்கிற கசப்பான உண்மையை மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்கத் தான் வேண்டியிருக்கிறது. கவிஞனும் உரிமைக்குரல் எழுப்பவேண்டித்தான் இருக்கிறது.

இலக்கிய விழாக்களில் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளுக்குத் தலையங்கங்கள் தீட்டி உபதலைப்புக் கொடுத்துப் பிரசுரித்தும், ஒரே பத்திரிகையில் ஒரே தினத்தில ஒரு பேச்சாளனின் நிழற்படத்தை ஒன்றுக்கு மேற்பட்ட பல இடங்களில் பிரசுரித்தும் விளம்பரம் பண்ணும் செய்தித்தாள்கள் கவிஞர்களைப் பொறுத்தமட்டில் பராமுகமே செய்கின்றன.

ஒரு சில பத்திரிகைகள் சில சமயங்களில்கவியரங்கப் படமொன்றை அரங்கத்தில் கலந்துகொண்ட கவிஞர்களெல்லோருடைய பெயர்களையும் குறிப்பிடாமல் பிரசுரித்து விடுகின்றன. அப்படி வெளிவருவது கூட மிகமிக அபூர்வமான செயல்தான்.

கவியரங்கம் பற்றிய செய்தியிற்கூடக் கஞ்சத்தனந்தான் காணப்படுகின்றது. கவியரங்கம் முடிந்த பிற்பாடு 'இன்ன' கவிஞரின் தலைமையிலே கவியரங்கம் நடைபெற்றதென்று எங்கோ ஒரு ஒதுக்குப்புறத்திலே மிகமிகச் சிக்கனமாகச் சில இதழ்களில் செய்தி வரும். பல இதழ்களில் கவியரங்கம் பற்றிய வாடையே இருக்காது.

இவ்வாறு கவிஞர்கள் அலட்சியப்படுத்தப் படுகிறார்களென்பதற்கு உதாரணமாக பானைச்சோற்றில் பதத்திற்குச் சில அவிழ்கள் பார்ப்பதொப்ப நான் கலந்தும் இருட்டடிப்புச் செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளிற் சிலவற்றைக் குறிப்பிகிறேன். (அ) சில வருடங்களுக்கு முன்பு மிகமிகப் பிரபல்யம் அடைந்திருந்த ஒரு எழுத்தாளர் சங்கம் 63ல் பிரம்மாண்டமான முறையிலே இரு தினங்களாக ஒரு கலை, இலக்கியப் பெருவிழாவை நடாத்தியது. என்னையும் கவியரங்கத்திற்கு அழைத்திருந்தது.

அழைப்பை மனமுவந்தேற்ற நான், என்சொந்தச் செலவிலேயே சென்று விழாவிற் கலந்து, நான் பொறுப்பேற்ற நிகழ்ச்சியிற் கலந்து

(4-ம் பக்கம் பார்க்க)

**எஸ். எல். சவுந்தரநாயகம்**

# புரட்சிப் புலவன் கந்தமுருகேசனார்

ஈழத்தின் வடபாலுள்ள புற்றளை என்ற சிற்றூர் கந்தமுருகேசனாரைப் பெற்றுப் பேரூராயிற்று. கந்த முருகேசனார் புகழ் பூத்த புலோலியில் புற்றளைக் கிராமத்தில் 27-5-1902ல் இங்கு பிறந்தார். இளமையிலேயே செழுந்தமிழில் தள்ளா இன்பு கொண்டு செந்தமிழாம் பைந்தமிழ் சோலையில் புகுந்து திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கிய நூல்களையும் நன்னூற் காண்டிகையுரை, தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் கந்தபுராணம் சிவராத்திரி புராணம் போன்ற புராண நூல்களையும் இவர் கசடறக் கற்றார். இவ்விளம் பருவத்திலேயே இவர் புராணங்களுக்குப் பயன் சொல்வதில் விழுமிய புகழ்பெற்று மிளிர்ந்தார். அக்காலத்தில் தேன் குடத்தை மொய்க்கும் எறும்பினம்போல இவரின் தெள்ளிய தெளிவுரையைக் கேட்க எள்ளிட இடமின்றி தமிழார்வமிக்கோர் மொய்த்து நிற்பர். வாலிபப் பருவத்திலேயே இவர் பாரிச வாதம் என்னும் நோயால் கைகால் செயலிளக்க இருந்த இருக்கையிலே இருந்த போதிலும் இவர்பால் தமிழ்ப் பற்றுக் குன்றாது வளர்ந்துகொண்டே சென்றது.

"மரம் பழுத்தால்
வெளவாலை வாவென்று கூவி
இரைந்தழைப்பார்
யாருமங்கில்லை"

என்று மூதாட்டி ஔவை கூறியது போன்று இவரது அறிவுரைகளும், ஆராய்ச்சித் திறமும் மாணவ சமுதாயத்தைத் தன்பால் ஈர்த்தது. இவர் தமிழன்னையின் தண்ணொளியைத் தமிழ் உள்ளங்கள் அறிய வேண்டும் எனக்கருதி 'தமிழகம்' என்னும் கல்விச் சோலையை நிறுவினார்.

'இம்மென்னும் முன்னே
எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால்
ஆயிரம் பாட்டும்'

பாடக்கூடிய கவிகாளமேகம்போல முருகேசரும் வேகமாகவும் கருத்தாளத்துடனும் கருமுகில் பெருமழை பொழிவதுபோன்று கவிமழை பொழிவார். மாணவர் ஒருவர் முதலில் இருந்து வாசித்தாலும் கடைசியிலிருந்து வாசித்தாலும் ஒரே சொல் அமைந்த வசனத்தை இயற்ற முடியுமா? என்று கேட்டவுடனே, யாது ஒரு சிரமுமின்றி ஈரடிக் குறளொன்றினைப் பாடினார்.

"மணமாலை சூடி
மகிழவழகி
மடி சூலை மாணம"

இது ஒன்றே இவரைச் 'செந்தமிழ்க் காவலன் கந்த முருகேசன்' என்பதை வலியுறுத்துகிறது.

பாரதநாட்டில் பாரதி தோன்றி அறியாமை இருளை அகற்றி நல்லொளி பரப்பியது போன்றே, ஈழத்திலும் கந்தமுருகேசனார் அறியாமையை அகற்ற அயராது உழைத்தார். இவரின் உள்ளத்தில் புரட்சிக் கொள்கைகள் புகுந்திருந்தமையால் இவர் புரட்சிப் புலவன் என்று புகழப்படுகிறார். மக்களின் மனத்தளத்தில் மண்டி மலிந்திருக்கும் பயனற்ற வழக்கங்கள், சாதிப்பிளவுகள், மூட நம்பிக்கைகள் முதலியவற்றைக் கண்டு வருந்தினார். அடியோடு அறுத்து இம்மரத்தை அழிப்பதற்குத் தன் வாழ்நாளில் அயராது பாடுபட்டார்.

"ஓடும் உதிரத்தில்-
வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்-
சாதி
தெரிவதுண்டோ
அப்பா"

எனச் சாதிப்பாகுபாட்டினைச் சாடினார்.

நாட்டுப் பற்றுக்கொண்ட இவர்தான் பிறகு ஈழவள நாடும் இங்கு வாழும் மக்களும் தமிழ் மணம் கமழ்ந்து மிக்கு விழுமி விளங்கினார்கள் என்பதை விரிந்துகிடக்கின்ற இப்பரந்த உலகத்தாரின் உள்ளத்தில் உறைய வேண்டும் என்பதற்காக நறுஞ்சுவை நிரம்பித்ததும்ப ஆறுமுகநாவலரின் பெரும் தமிழ்ப் பணியை எடுத்துக் காட்ட "நல்லை நாவலன் கோவை" என்னும் நூலைத் தனது தள்ளாடும் வயதில் நயம்பட இயற்றினார். இது ஒன்றே நமது தமிழ் தாத்தாவின் தணியாத் தமிழன்புக்கு நல்லணி செய்கிறது.

"தமிழ்ச்சுவை தேரும் செந்தமிழ் செல்வர்களுக்கு ஓர் இலக்கியக் கேணியாகவும், தமிழ் தொண்டர்களுக்கு விழுமிய குறிக்கோளைக் காட்டும் மணிவிளக்காகவும் அமைந்து மிளிர்ந்த கந்த முருகேசனாரை தமிழ்க்குலம் இன்று நினைவுகொள்ளுமாக.

**மாதனையூர்**
**சட்டநாதன்**


## தம்பி அன் கோ.,

**284, K. K. S ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்**

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விசுவரூபம் எடுத்தெழவே கள்ளிப்பெட்டிக்குக்கீழ் பவுத்திரமாக வைக்கப்பட்டிருக்கும் பொலிடோல் குப்பியை வலு உன்னிப்பாகப் பார்க்கலானாள்...

பிரேத பரிசோதனை... சாமேளம்... சவப்பெட்டி... பாடை... சுடுகாடெல்லாம் அவள் நினைவில் மின்னலாக மின்னி பயங்கர இடியாக முழங்கி ஆர்ப்பரித்து முழங்கித்தள்ள... "எல்லாரும் நித்திரைக்குப் போகட்டுக்கும்... இரவைக்குக் காட்டி வைக்கிறன்... சரியான விளையாட்டு. என்றெல்லாம் தனக்குள் குமுறிக் கொந்தளித்துக் கொண்டே... சில விநாடிகளில் மெல்லமாகத்தலையை மிதத்திப் பார்க்கின்றாள்... அவளுடைய தலைமாட்டில்... அசுக்கிடாமல் முருகு வந்து பெரிய பாவியாக நின்று கொண்டிருந்தார் ... அவருடைய கையில் மகளுக்கு மிக மிகப்பிரியமான உழுந்து வடையும், கச்சான் அல்வாவும், எள்ளுருண்டையும் பெரிய பார்சலாகக் கிடந்தன. "...ஏன்ரா சனியனே... வழிதெருவிலை பிரண்டு போகாமல் என் முன்னாலே வந்து நிற்கிறாய்" என்று பொல்லாத மனவேகரத்தோடு கொதித்தெழுந்து வெறிகொண்ட நாயாகப் பாய்ந்து விழுந்து உள்ள மனவிசரையெல்லாம் கொட்டித் தீர்த்துவிடும் வேகத்தோடு வாய் உன்னியவள்...அப்படியே முருகுவின் முகத்தில் செருப்பினால் ஓங்கி அடித்துவிட்ட கணக்காக... தன்னுடைய முகத்தை விசைத்தபடி மறுபக்கமாகத் திருப்பிக் கொள்ளுகிறாள்... அதைப்பார்த்து தோளில் போட்டிருந்த துவாய்த்துண்டினால் தனது கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்ட முருகு "...தங்கச்சீ... ராசாத்தீ...என்னுடையென்ன கோவமோ... கோவிக்காதையம்மா...

நானுண்ணை தெரியாமல் நான் செய்துபோட்டன். இப்ப...எனக்குச் சரியான பொறுத்த பசியாய்க்கிடக்குது...ஒரெப்பன் சோறுதருவியே..." - பெரிய பாரதூரமான குற்றத்தைச் செய்தவன்...நீதிபதிக்கு முன்னால் நின்று அழுதழுது மன்னிப்புக் கேட்டுக்கொண்டமாதிரியாகக் கேட்டுக் கேட்டவாய் மூடுமுன்னர் "என்ரை கையாலை சோறுவாங்கித் தின்ன உனக்கு வெக்கமில்

போமோ மெய்யே ... ஒரு குமர்ப் பிள்ளையிடம்" -ஆச்சிப்பிள்ளை மாமிதான் முருகுவை மேலும் வாட்டினாள். "கொஞ்சம் பொறுடி... தங்கச்சீ... என்னை ஏசாதை... நான் செய்தது முழுப்பிழை தான்... இனிமேல் ... ஒரு நாளும்... இப்படி நான் பிழை விடமாட்டன்...எனியும்... நான் பிழைவிட்டால் ... என்னை... ஆரென்டாலும்... கட்டிவைச்சுப்போட்டு நல்லாய் அடியுங்கோ..." என அவளுக்கு மொழிந்து கால்களும் கைகளும் இறுகக்கட்டப்பட்டு பிறந்த மேனியோடு நெருஞ்சி முட்பற்றைக்கு மேல் வளர்த்தப்பட்டதுபோன்ற பொல்லாத மனச்சுள்ளுதலோடு முருகு தனக்குத்தானே கொடூரமான தண்டனை விதித்துக் கொள்கிறார். "ஒரு குமர்ப் பிள்ளை இருக்கிறடத்திலே ஏனிவ்வளவு கஞ்சல் வேலையெல்லாம்?" என்று ஆச்சிப் பிள்ளை மாமி தமையனை உறுக்காட்டியமாகக் கேட்டுத் தனது கண்டிப்பை மன ஆத்திரம் தீருகின்றவரைக்கும் தொடரவேண்டுமென்று நினைத்தபோதிலும் அதற்குள் ஏதோ ஒரு மன உருக்கத்தின் வசத்தினளாகி சிறுபிள்ளையாக வெம்பி வெம்பி அழத்தொடங்கிவிடுகின்றாள்.


"...நீ... அழாதையடி தங்கச்சீ... நீயழ... எனக்கும் கண்கலங்கப் பாக்குது... கேளண்டி தங்கச்சீ ... அவள் செல்லமும் செத்து... இந்த யாசியோட பத்துவரிசம்முடியப்போகுது... இந்தப் பத்து வரிசத்திலும்ராத்திரித்தான் அவளைக் கனவிலை...வடிவாகக் கண்டிருக்கிறன்...அவள் வந்து ... என்னையும் கூட்டிக் கொண்டு... ஒரு தேரிலை... எங்கேயோ ... போகிறது போலக் கனவு கண்டனடி ஆத்தைதை! அதோடை... பொழுது விடிஞ்சு எனக்குப் பழைய நினைவுகளெல்லாம் கிண்டுப்பட்டு கிளறப்பட்டு நான்...பொல்லாத விசரன் ...பயித்தியக்காரனாய் மாறி ...இப்பிடியெல்லாம் இண்டைக்கு நடந்துபோச்சு"- பேசிக்கொண்டு நின்ற மணிதன் திடீரென்று பெரிய பனை விழுந்தசத்தத்தில் நில மதிரக்கீழே வீழ்ந்தார்.

அச்சிப்பிள்ளையையும் முந்

## நம்நாட்டுக்கலைஞர்கள்

பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜே. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் இன்று நேற்றல்ல 1936ல் 'சத்தியானந்தன்' என்னும் நாடகம் நடித்தது முதற்கொண்டு இன்றுவரையில் அறுபதிற்கும் அதிகமான மேடைகளில் தோன்றியுள்ளார். கதை, வசனம் எழுதுவதோடு பல நாடகங்களுக்கு இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் விளங்கி இருக்கின்றார்.

1942ல் தமது முதல் தயாரிப்பாக 'ஞானசீலன்' என்னும் நாடகத்தை தயாரித்த இவர் ஏறக்குறையப் பன்னிரண்டு வருடங்களுக்குப்பின் அதாவது 1954-ல் 'காந்தமலர்' என்னும் நாடகத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார். அதன் பின்பு 'திருந்திய உள்ளம், 'அன்பின் பெருமை' 'மந்திரி மகள் மல்லிகா' விதியின் விளையாடல்' 'இந்தக் காலம்' போன்ற நாடகங்களையும் பாஷையூர் 'நிலா ஜோதி' நாடகமன்றம் என்ற ஒன்றை நிறுவி அதன் மூலமாக வெளியிட்டுள்ளார்.



தமது உறவினரான ரீ. இராசேந்திரம் அண்ணாவியார்தான் தன்னை இந்தத் துறையில் ஈடுபட வைத்தவர் என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் இவர் சிநேகிதர்களால் ஜே. எஸ். பிள்ளையென்றே அழைக்கப்படுபவர். குருநகர், சென். ரொக் சனசமூக நிலையத்தினரால் பொன்னாடை அணிவிக்கப்பட்ட இவர் விரைவில் தமது சொந்தத் தயாரிப்பில் 'ஞானசவுந்தரி' என்னும் நாடகத்தைத் தயாரிக்கவிருக்கின்றார்.

செபஸ்தியாம்பிள்ளை முதன் முதலாக நடித்த 'சத்தியானந்தன்' என்னும் நாடகத்தில் பெண் பாத்திரமேற்று நாடகத்தின் கதாநாயகியாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 32 ஆண்டுகால அனுபவம் இவருக்கு!

உண்மைக் கதையிலிருந்து மாறுபட்ட புதுமையான 'ஞானசவுந்தரி' யாகவே அது இருக்கும் என்று கூறிக் கொள்ளும் இவர் அதற்கான தயாரிப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். எந்த விதமான பாகங்களையும் ஏற்று நடிக்கவல்ல ஜே.

இவருடைய ஆற்றல் இன்னமும் மேலோங்குவதோடு கலையுலகிற்கு இவர் இன்னமும் பல நாடகங்களைத் தயாரித்து அளித்து ஈழத்து நாடக உலகில் தன்னிகரற்ற இடத்தைப் பெறுவதற்கு எமது வாழ்த்துக்கள்.

—'ப'

## விந்தைக்கலைஞர்!

### வாயினால் நாதசுர ஒலி எழுப்புகிறார்

சங்கீதக் கருவிகளைக் கொண்டுதான் வாத்தியம் இசைக்கவேண்டும் என்பதில்லை. வெறும் வாயினாலேயே அபூர்வ வாத்திய சாரீரத்தைப் பெறமுடியும் என்று மெய்ப்பித்துக் காட்டியுள்ளார் 46 வயதான திரு. சு. மகாதேவன்.

கரணவாய் தெற்கில் பிறந்த இவ்விந்தைக்கலைஞர் ஓர் ஆங்கிலஆசிரியர். கரணவாய் விநாயக வித்தியாலயத்தில் ஆசிரியப்பணி புரிந்துவருகின்றார். இளம் வயதில் ஏற்பட்ட சங்கீதப் பைத்தியம் இவரை நாதஸ்வரத்தின் பக்கம் திருப்பிவிட்டது. இதன் விளைவாக எங்கெல்லாம் நாதஸ்வர கானம் ஒலிக்கின்றதோ அங்கெல்லாம் அவர் செல்லத் தவறுவதில்லை.

நாதஸ்வரமெட்டு, அமைப்பு, சாரீரப் பண்பு ஆகியவற்றையும், நாதஸ்வரக் கலைஞர்களின் அங்கஅசைவுகளையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தவர் தானும் ஓர் நாதசுரக்கலைஞனாக விரும்பினார். ஆனால் நினைப்பதெல்லாம் நடந்துவிடுவதில்லை.

இதனால் வாயினாலேயே தனது இரு கைகளின் விரல்களின் உதவியுடன் நாதஸ்வரம் போன்று வாசிக்கத் தொடங்கினார். குருவின்றி ஏகலைவன் வில்வித்தை கற்றதுபோல் இவரும் தனது மனதில் மானசீகமாகக் குரு ஒருவரைக் கற்பனை பண்ணிக்கொண்டு "சாதகம்" செய்துவந்தார். அப்போது தான் அவர் மனத்தில் நாதஸ்வர உலகில் இது ஒரு புதுமையாக விளங்கும் என்ற எண்ணம் எற்படத் தொடங்கியது.

ஏற்றிருப்பதோ ஆங்கில ஆசிரியர் பணி. ஆனாலும் இடமாற்றம் பெற்று வேறு இடங்களுக்குச் சென்ற போதிலும் தனது அதிசயத் திறமையைக்கைவிடவில்லை. தொடர்ந்து கடுமையான உழைப்பினால் தென் இலங்கை உட்பட ஈழத்தின் பலபகுதிகளிலும்கருவியற்ற நாதஸ்வரக் கலைஞராகப் புகழ்பெற்றுத்திகழுகின்றார்.

இவரது நாதஸ்வர சாரீரம் படுத்திருக்கும் அரவத்தையும் ஆடச்செய்யும். அவர் வாசித்துக் கொண்டிருக்கும் போது கேட்போர் மெய்மறந்து அவரது ஒவ்வொரு "இராக" இழுப்பிலும் ஒன்றிப்போய் விடுகின்றனர்.

இலங்கையில் பல பொது மேடைகளிலும், கோவில் திருவிழாக்களிலும் பங்கு பற்றிக் கொண்டிருக்கும் இவர் இலங்கை வானொலியிலும் தனது 'திறமை'யைக் காட்டியுள்ளார். மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவ்விந்தைக் கலைஞர் ஒரு சிங்களப்பெண்மணியை மணந்துள்ளார். தனது மனைவி தந்த ஊக்கமே இப்புகழுக்குக் காரணம் என்று அவர் மகிழ்ச்சியுடன் சொன்னார்.

"இது ஒரு 'கலை'. இதனைப் பணத்திற்காக விலைபேசுவது முறையானதல்ல. ஆனால் கலைஞர்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்குடன் விரும்பிக் கொடுப்பவர்கள் எம்நாட்டில் தோன்றவேண்டும். அப்பொழுது தான் கலைத்துறையில் அற்புதங்களைச் செய்யமுடியும்" என்பதே அவருடைய இலட்சியம் என்று தெரிவித்தார்.

— எஸ். ஜே. ஜெயக்குமார்

'தேவன்' ஒரு தனி இயக்கம். 'தேவன்-யாழ்ப்பாணம்' பற்றி அடுத்தவாரம் 'கணேஷ்' எழுதுகிறார்.

'மேகலா' தயாரித்துத் தரும




## நாடக விமர்சனம்

### 'வில்லங்கம்'

[22-5-69 வியாழக்கிழமை யாழ். கனிஷ்ட தொழில் நுட்பகல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் இடம்பெற்றது.]

வழமையான நாடகங்களைப்போலவே இருவர் காதலிக்கின்றனர். காதலனின் தந்தை மைந்தனின் காதலை வெறுத்தது மட்டுமல்லாமல் வீட்டைவிட்டே அவனைத் துரத்துகிறார். வீட்டைவிட்டு வெளியேறிய காதலன் காதலியினாலும் கைவிடப்படுகிறான். இதனால் அவன் பட்ட வில்லங்கங்களை விளக்க கதாசிரியர் எடுத்த கதைதான் "வில்லங்கம்".

(ஆனந்தன்) கதாநாயகனாக நடித்த பொன்னையா, "வில்லங்கம்" வேலுப் பிள்ளையாக மாறி வெளுத்து வாங்குகிறார். ஆனந்தனும் வில்லங்கம் வேலுப்பிள்ளையும் இருவரா? ஒருவரா? என்று ரசிகப் பெருமக்கள் வில்லங்கப்பட்டனர். ஆனந்தியாக (கதாநாயகி) நடித்தது ஆணா பெண்ணா என்று பெண் ரசிகர்களே வில்லங்கப்பட்டது வில்லங்கத்துக்கு ஒரு "கிறடிற்". ஈஸ்வரதாஸ் ஆனந்தியின் தந்தையா? தமையனா? அவர் பேசிய வசனத்திலிருந்துதான் இக்கேள்வி பிறந்துள்ளது. ஆனந்தனின் தந்தையாக நடித்த சிவத்துக்கு ஒரு சபாஷ்!

நாடகத்தின் ஆரம்பத்தில் "வில்லங்கம்" என்ற தலைப்பு ஏன் இட்டார்கள் என்று ஏங்கிய ரசிகர்களுக்கு முடிவில் தலைப்பிடப்பட்ட காரணம் நன்றாக புரிந்திருக்கும். ஆம்! ரசிகர்கள் "ரொம்ப" வில்லங்கப்பட்டு விட்டார்கள். இருந்தாலும் மரிக்கும் தறுவாயிலிருந்த "வில்லங்கத்"துக்கு மருந்தூட்டியது செல்வி நிர்மலா முத்துராசாவின் பின்னணியே! பத்து நாட்களில் உருவாகிய பச்சை குழந்தை "வில்லங்கம்" யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் நாடகக் கலை உணர்வை பல படி உயர்த்தாதுவிட்டாலும் ஒரு படி உயர்த்தியேவிட்டது!

— 'சபா. புஸ்'

### 'என் தந்தை'

சங்கானை பாலமுருகன் நாடக மன்றத்தாரின் முதலாவது தயாரிப்பான 'என் தந்தை' சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோவில் முன்றலில் அரங்கேறியது. பண்பட்ட நல்ல கலைஞர்கள் இந்த நாடகத்தில் நடித்தனர். பாத்திரத்தை உணர்ந்து கச்சிதமாக நடித்தனர். கதாநாயகனாக நடித்த எஸ். எஸ். ரஞ்சன், கதாநாயகியாக நடித்த புஷ்பநாதன் அருமையாக நடித்து, ரசிகர்களைக் கவர்ந்தனர்.

தேவராஜன், தவராஜ், ராஜதுரை, ஜெயபாலகிருஷ்ணன், சற்குணம் விஜயகுமார், விக்னேஸ்வரன், பாலச்சந்திரன், நவரத்தினராசா சிவதாசன், உதயகுமார் ஆகியோருடைய நடிப்பும் குறை சொல்லமுடியாதபடி அமைந்திருந்தது. விக்னேஸ்வரன் இந்த நாடகத்தின் கதாசிரியர். எஸ். எஸ். ரஞ்சன் தயாரிப்பாளர்.

—'எஸ்.'

இன்று!

### வேல் ஆனந்தனின் 'கைலைத்தாண்டவம்'

கலைக்கோயில் 'வேல் ஆனந்தன்' குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை காரைநகரில் நடைபெறுகிறது. காரைநகர் நடராசா நினைவு மண்டபத்தில் வேல் ஆனந்தன் புதிதாக அமைத்துள்ள 'கைலைத் தாண்டவ நடனம்' விசேஷ அம்சமாக இடம் பெறுகிறது.

'சக்தி'யாக செல்வி பத்மினி நடராசாவும், சிவனாக ஆனந்த இராசமாணிக்கமும் ஆடுகிறார்கள். 'நானா நீயா' என்று போட்டா போட்டியாக இருவரும் ஆடுகிறார்கள். வேல் ஆனந்தன் அமைத்த நாட்டியமல்லவா!

## சினிமாவும்

களும் 'சிக்', 'ஷிப்ட்' உடைகளும் மலிந்துவிட்ட சினிமாப்படத்தைப் புறக்கணிப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வியே...'' - பெரிய பாரதூர மான குற்றத்தைச் செய்தவன்... நீதிபதிக்கு முன்னுல் நின்று அழுதழுது மன்னிப்புக் கேட்டுக்கொண்டமாதிரி யாகக் கேட்டுக் கேட்டவாய் மூடுமுன்னர் ''என்ரை கையாலே சோறு வாங்கித் தின்ன உனக்கு வெக்கமில்லையா?... உனக்குச் சோறு போட்டுத்தாற இந்தக் கையை அடுப்பு நெருப்புக்குள் நல்லாக வைச்சுச்சுட்டுப் போசுக்கினுலும் 'அதனுல் துன்பப் படமாட்டேன்'' என்று மன்னிப்புக்கேட்டவனுக்கு கொஞ்சமும் கருணை காட்டாமல் ஒரேமுடிவாக மரணதண்டனை வழங்கிவிட்ட நீதிபதியைப்போல தவராணி மௌனம் சாதித்து தீர்ப்புக் கட்டிவிடுகிருள். இவ்வேளையாக வீட்டுக்குப்போய்த் திரும்பிவந்த ஆச்சிப்பிள்ளை ''உதார் எங்கடை அண்ணரோ. இருந்ததுக்கிடேலை குடிகாறர் வெறிகாறர் மாதிரி உனக்கு வந்தவியாதி ...என்னமெய்யே...?'' என்று கண்டிப்பான குரலில் அதட்டிக் கேட்டபடி அடிவீட்டிற்குள் நுழைந்தாள். '...கறிக்குள் ஒரு நாளைக்கு உப்புக் கூடிக் குறைஞ்சு போனு... உன்ரை சங்கை குறைஞ்சு ...இப்பிடியெல்லாம் இண்டைக்கு நடந்துபோச்சு''- பேசிக்கொண்டு நின்ற மனிதன் திடீரென்று பெரிய பனை விழுந்தசத்தத்தில் நிலமதிரக்கீழே வீழ்ந்தார்.

ஆச்சிப்பிள்ளையையும் முந்திக் கொண்டே துடித்துப் பதைத்து தலையில் பேரிடி விழுந்துவிட்ட மாதிரியாக பொல்லாதமலாரடியோடும் உருக்கத்தோடும் முதல் வேலையாகக் குசினிக்குள் விழுந்தடித்தோடிய தவராணி உடலெல்லாம் பதறித்துடிக்க அவதிஅவதியாக ...சோற்றுக் கோப்பையை எடுத்துத் தகப்பனுக்குப் பேய்க்குப் படைத்த கணக்காக சோறு போடத் தொடங்கி விடுகின்றுள்...

ஆதவனும் ... மேற்கில் வீழ்ந்து தனது ஆயுளை முடித்துக்கொள்கிருன்...

ஆச்சிப்பிள்ளையின் அலறல் பேய்க்கூச்சலாக எழுகிறது.

(யாவும் கற்பனை)

அடுத்தவாரம் 'கணேஷ்' எழுதுகிருர்.

புதுமையாக விளங்கும் என்ற எண்ணம் எற்படத் தொடங்கியது.

றனர்.

இலங்கையில் பல பொது மேடைகளிலும், கோவில் ...

டும். அப்பொழுது தான் கலைத்துறையில் அற்புதங்களைச் செய்யமுடியும்'' என் ...

பதே அவருடைய இலட்சியம் என்று தெரிவித்தார். கள். வேல் ஆனந்தன் அமைத்த நாட்டியமல்லவா!

— எஸ். ஜே. ஜெயக்குமார்

# சினிமாவும் பெண்களும்

— சி. கல்யாணி —

நாகரிகம் வளர்ந்துவரும் இன்றைய நாளில் பலரைப் பீடித்துள்ள தீராதவியாதி சினிமா பார்ப்பதாகும். தமிழரின் உன்னதமான பண்பை கலையை, கலாச்சாரத்தை, மொழியை வளர்க்கவேண்டிய ஒரு முக்கியமான கருவியாக அமைய வேண்டியதுசினிமா. ஆனல் செலவுசெய்கின்றனர். சினிமாவில் வரும்காட்சிகளும் அர்த்தமற்ற பாடல்களும், நம்பமுடியாத கதையமைப்பும் மலிந்துவிட்டது. பெண்கள் பார்க்கக் கண்கூசும் காட்சிகளும் நம்மினத்தின் பண்பைத் தாழ்த்திவிடுகிறது.

இன்றைய படங்கள் பல இளைஞர்களையும், நல்லவர்களையும்தீயவழிகளில், பகட்டான போலி வாழ்க்கையில் அநாவசியமான ஆடம்பரச் செலவுகளில் இன்னும் கொலை, கொள்ளை போன்றவைகளில் ஈடுபட மறைமுகமாகத் துணைபுரிகின்றது.

வருங்கால சந்ததியினரை நல்வழியில் இட்டுச்செல்லும் பொறுப்புமிக்க குடும்பப் பெண்கள் பலர், சினிமா பார்ப்பதை ஒரு தொழிலாக கொண்டுள்ளனர். கணவனின் பணத்தையும் பொன்னை நேரத்தையும் வீணடிக்கின்றனர். அதுமட்டுமின்றி குழந்தைகளையும் வீட்டில் விட்டுவிட்டுசினிமாபார்க்கச் செல்கின்றனர். சினிமாவில் நடிகை உடுத்தும் விலையுயர்ந்த ஆடைகளையும், அவள் பாவிக்கும் அழகு சாதனங்களையும் வாங்கி கணவனின் வருவாயைச்

நாகரிகம் என்ற போர்வையில் மறைந்து கொண்டு இளமங்கையர் பலர்மேனுட்டுப் பாணியில் உடை உடுத்தி அலங்காரப் பதுமைகள் போல் காட்சிதருகிறுர்களே! இதெல்லாம் சினிமாவினுல் வந்தசீர்கேடுதானே! மூடப்பட வேண்டிய மேனியை, மெல்லியதோர் ஆடைமயமாக்கி பச்சைப் பகட்டான கண்கூசும் வெளித்தோற்றத்தை நாகரிகமென்றுல்முறையாகுமா? ஆடைக்குறைப்பும் அலங்காரப் பூச்சுக்களும், அரைகுறை ஆங்கில உரையாடலும், பெண்களின் முன்னேற்றமாகுமா? கல்வி கேள்விகளில் சவைகளில் ஈடுபட்டு முன்னேற்றம் காணமுயலுவோம்.

நல்ல கதையமைப்புள்ள படங்களை வரவேற்போம். தமிழ்மொழியை மதிக்காது, ஆங்கில இசையும் வசனங்களும் 'சிக்', 'ஷிப்ட்' உடைகளும் மலிந்துவிட்ட சினிமாப்படத்தைப் புறக்கணிப்போம். நாகரிகம் என்றுகூறி அநாகரிகமாக பண்பை மறந்து நடக்கவேண்டாம். நமது மொழியை பண்பை கலையைக்காப்போம்.

## பெண்களின் ஏழு பருவங்கள்

பருவப்பெண், பருவப்பெண் எனப் பேசும் பொழுதும் எழுதும் பொழுதும் கூறுகிறேம். பெண்களுக்கு ஏழு பருவங்கள் உண்டு. எதைக்குறிப்பிடுகிறேம் என்பது பலருக்குத் தெரியாது. இதோ! அந்த ஏழு பருவங்களும் அவற்றிற்குரிய வயதுகளும்:-

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பேதை | — | 5 | முதல் | 7 | வயது | வரை |
| பெதும்பை | — | 8 | ,, | 11 | ,, | |
| மங்கை | — | 12 | ,, | 13 | ,, | |
| மடந்தை | | 14 | ,, | 19 | ,, | |
| அரிவை | — | 20 | ,, | 31 | ,, | |
| தெரிவை | — | 26 | ,, | 31 | ,, | |
| பேரிளம்பெண் | — | 32 | ,, | 40 | ,, | |

# குடும்பச் சுடர்

தயாரிப்பு குணம்

## ''நுண்-மின் அலை-அடுப்பு''

விஞ்ஞான வளர்ச்சியால் சுருங்கிக்கொண்டு வரும் இவ்வுலகில் மாதர்கள் தம் வேலை நேரத்தைச் சுருக்கிக் கொள்ளவும் எத்தனையோ வசதிகள் ஏற்பட்டுள்ளன.

நங்கையரே! உங்கள் நேரத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க உதவுவதற்கு மேற்கு ஜெர்மனி முன்வந்துள்ளது. சமையல் வேலைக்கு உபயோகிப்பதற்கு 'நுண்-மின் அலை அடுப்பு என்ற ஒரு புதியவகை அடுப்பை மேற்கு ஜெர்மனியர் கண்டு பிடித்துள்ளனர். இந்தஅடுப்பு அசுரவேகத்தில் நமக்கு உணவைச் சமைத்துத் தந்துவிடும். நாம் செய்யவேண்டியது இந்த அடுப்பின் வேகத்துக்குத் தக்கபடி நாம் தயாரிக்கும்உணவுவகைக்கான பொருள்களை மிக விரைவாக அந்த அடுப்போடு போட்டிபோட்டு ஆயத்தம் செய்து அதற்குக் கொடுக்க வேண்டியதாகும். மேலைநாடுகளில் இந்த அடுப்புகள் வந்ததும் இதுகாலவரைப் பாவனையில் இருந்த 'காஸ்' அடுப்புகள் மின்சார அடுப்புகள் ஆகியன பத்தாம் பசலிகளாகிவிட்டன. இந்த 'நுண் மின் அலை' அடுப்பில் சிறியரக அடுப்பொன்றை நாம் வாங்க வேண்டுமாயின் எவ்வளவு ரூபா செலவு செய்ய வேண்டும் தெரியுமா? ஆகக் குறைந்தது ரூபா 6375 தான்.

# உடைகளைச் சலவை செய்ய சில வழிகள்

எங்கள் தேவைகளிற் பலவற்றைப் பூர்த்தி செய்ய பிறரின் உதவியை எதிர் பார்ப்பது இன்றைய நாகரிகமாகிவிட்டது. உதாரணமாகத் தங்கள் அழுக்குடுப்புகளைச் சலவை செய்ய எந்நேரமும் சலவைத் தொழிலாளியை எதிர்பார்ப்பாரும் உளர். இதனுல் அதிக பணம் செலவாவது மட்டுமன்றி உடுப்புகளும் விரைவில் பழுதடைகின்றன. எனவே நாமும் சலவைத்தொழிலில் மேற்கொள்ளப்படும் சில முறைகளைத் தெரிந்து கொண்டால் உடைகளைச் சுலபமாகப் பிறருதவியின்றி சலவை செய்துவிடலாமல்லவா? இதோ நீங்கள்சலவை செய்யும்பொழுது கவனிக்க வேண்டிய சில வழிகள்:

முதலில் கிளியல்களையெல்லாம் தைக்கவேண்டும். ஒவ்வொரு கறைபிடித்த உடுப்பையும் எடுத்து என்னென்ன கறையெனக் கண்டு பிடித்து அவற்றை முதலில் போக்கவேண்டும். நிறத்தின்படி உடுப்புகளைப்பிரிக்கவும். வெள்ளை உடுப்புகளைத் தனியாகப் பிரித்துச் சலவை செய்யவேண்டும் அதிகம் அழுக்குப் பிடித்த உடுப்பை சுடு நீரில் கழுவவேண்டும். தண்ணீர் துப்பரவாக வருமளவும் அதாவது துணிகளில் உள்ள சவர்க்காரம் போகுமளவுக்குத் தண்ணீரை மாற்றி மாற்றிக் கழுவி நீலம் போட்டுத் தோய்க்கலாம். கஞ்சிபோட விரும்பினுல் கஞ்சியையும் நீலத்தையும் கரைத்து வடித்து அதனுள் உடுப்பைப் போட்டுப் பிழிந்து காயவைக்கலாம்.

நிற உடுப்புகள்:-நிற உடுப்புகளைச் சலவை செய்யும்போது தனித்தனியாகப் பிரிக்கவேண்டும். பின் ஒவ்வொன்றையும் தனித்தனியாகத் தேய்த்து புறப்பக்கமாக நிழலில் காயவிட வேண்டும்.

பிளானலும் கம்பளியும்:: மெல்லிய சூடான நீர் பாவிக்கவேண்டும். இவைகளைச் சவர்க்காரநீரில் அதிக நேரம் ஊறவிடக் கூடாது. தோய்த்தபின் பிழியக் கூடாது. அதைத் துவாயினுல்சுற்றி ஈரத்தை எடுத்த பின்னர் பலகையில் போட்டு நிழலில் காயவைக்கலாம்.

பட்டு: சுடுநீர்பாவித்தால் நல்லது. சன்லைட் பாவிக்காமல் 'லக்ஸ்' அல்லது சவர்க்காரத்தூள் பாவிக்கவேண்டும்.

கால்மேசு: தினமும்தண்ணீரில்கழுவிப்போடவேண்டும். இல்லாவிடில் வியர்வையினுல் கிழிந்துவிடும்.

கைக்குட்டை: தடிமல் நாளில் பாவித்த கைக்குட்டைகளை உப்புநீரில் ஊறவிட்டுத் தோய்த்தால் சளியும் கிருமியும் போய்விடும்.

திரைச்சீலை: நன்முகத் தூசியைத் தட்டிவிட்டுத்தோய்த்தெடுக்கலாம். பட்டுச்சேலைகளைப் பெற்றேலால் கழுவுதல் நல்லது.

### கஞ்சிபோடும்முறை

சவ்வரிசியை நன்முகக் காய்ச்சி வடித்து அதற்குள் நீலமும் கலந்து (வெள்ளை உடுப்பை) தோய்த்த உடுப்பை அதனுள் போட்டுத்தோய்த்து எடுக்கலாம். சிறுபிள்ளைகளின் உடுப்புகளுக்குக் கஞ்சிபோடுதல் கூடாது. சவ்வரிசியைக் காய்ச்சும்பொழுதுஅதற்குள் மெழுகுவர்த்தியில் சிறு துண்டு சீவிப் போட்டுக் காய்ச்சினுல் உடுப்புகளுக்கு மினுமினுப்பைக்கொடுக்கும்.

### ஸ்திரிக்கை போடுதல்

வேண்டியளவு சூட்டைக் கணித்துக் கொள்ளலாம். உடுப்புகள் சிறிது உள் ஈரமாயிருத்தல் நல்லது. முதலில் 'கொலர்' 'மடிப்பு' போன்ற தடிப்பான இடங்களை ஸ்திரிக்கை பண்ணவும் 'நைலோன்', 'எம்பிரோய்டறி' வேலைப்பாடமைந்த துணிகளுக்குமேலே சீலை ஒன்றைப்போட்ட பின்பே ஸ்திரிக்கைபோடவேண்டும்.

## மணமகன் ஸ்டோர்ஸ்


ஜப்பானில் 'மணமகன் ஸ்டோர்ஸ்' என்ற பெயரில் பல கம்பெனிகள் இருக்கின்றன. இந்தக் கம்பெனிகளுக்குப் பெண்ணே, பெண்ணின் தந்தையோ, தாயோ வந்து தங்களுக்குப் பிடித்தமான மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொள்ளலாம். இந்தக் கம்பெனிகளில் மணமகன்களின் புகைப்படங்களும் அவர்களைப்பற்றிய விபரங்களும் இருக்கின்றன.

— ஆதாரம் தினமணி

## பதினறு பேறுகள்

பதினறும் பெற்றுப் பெருகவாழ் என்று வாழ்த்துவது உண்டல்லவா? அந்தப் பதினறு பேறுகளும் இவை:-

| | | | |
|---|---|---|---|
| புகழ் | கல்வி | வலிமை | வெற்றி |
| நன்மக்கள் | பொன் | நெல் | நல்லூழ் |
| நுகர்ச்சி | அறிவு | அழகு | பெருமை |
| இனிமை | துணிவு | நோயின்மை | வாழ்நாள் |


மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்

தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமெண்ஸ்
74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயிரைப் பலிகொள்ளும் கொடிய மலேரியா

# நம்மை அது பலி கொள்ளு முன் அதனை முற்ருக ஒழிப்போம்

மக்களை உயிரோடு சிரழித்து, உழைக்கும் சக்தியற்றவர்களாக்கி, உயிரையே பலி கொள்ளும் கொடிய மலேரியா நோய், காலத்திற்குக்காலம் தன் கொடுமுகம் காட்டி கொடுவினைகள் பல செய்துவருவது நம் நாட்டிற்குக் கிடைத்த சாபக்கேடுபோலும். 1934-35-ம் ஆண்டுகளில் இலங்கையரை முதன் முதலில் பெருமளவில் பீடித்துக்கொண்ட இந்நோய் ஏறக்குறைய 8 மாத கால இடைவெளியில் 80,000 க்குமதிகமானவர்களை எமலோகம் காண வைத்ததுமட்டுமன்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய

**அ. ஜேம்ஸ் ஞானப்பிரகாசம்**

வகையில் உணவு, உடை, மற்றும் பல துறை உற்பத்திகளையும் பாதித்து, இன்னும் ஆயிரக்கணக்கானேரை உயிரிருந்தும் ஊசலாட முடியாத நடைப்பிணங்களாக்கி விட்ட கொடுமையை இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகிறது.

சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, தன் வேகம் தணிந்து 1960-65 ஆண்டுகளில் ஏறக்குறைய மலேரியா முற்ருக ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்டு வந்தது. பழையபடி வேதாளம் முருக்கமரத்திலேறிய கதை போன்று 1967-ம் ஆண்டில் மீண்டும் புதிய உத்வேகத்துடன் மலேரியா பரவ ஆரம்பித்தது.

இலங்கையின் வரண்ட பிரதேசத்தின் பெரும்பகுதியில் முதலில் ஆரம்பித்த இந்நோய், மழையின்மை காரணமாக ஈரப்பிரதேசம் இடைப்பிரதேசம் ஆகியவற்றிலும் பரவுவதாயிற்று.

**பரவும் விதம்**

நோயினுல் பீடிக்கப்பட்ட பெண் நுளம்பு கடிக்கும் பொழுது மனிதனுள் செலுத்தப்படும் நுண்ணிய ஒட்டுண்ணிகளே மலேரியாவை உண்டாக்குகின்றன. இலங்கையில் இந்நோய்க்குக் காரணமான நுளம்பு ''அனேபிலிஸ் குலிசிபசியேசு'' என்று அழைக்கப்படுகின்றது.

மலேரியா நுளம்புகளினுல் மட்டுமே தொற்றக்கூடிய ஒரு நோய் அனேபிலிஸ் இனத்தைச் சேர்ந்த பெண் நுளம்பு ஒன்று மலேரியாவால் வருந்தும் ஒரு நோயாளியைக் கடிக்கும்பொழுது நோய்த் தொற்றின் முதற் கட்டம் ஆரம்பமாகிறது.

அந்த நுளம்புகடித்து உறிஞ்சும் இரத்தம் மலேரியா ஒட்டுண்ணிகளைக்கொண்டிருக்கிறது. பின்னர் அந்த நுளம்பு சுகதேகியான ஒரு மனிதனைக் கடிக்கும்போது அவனது உடலினுள் இந்த ஒட்டுண்ணிகளைப் புகுத்திவிடுகிறது. ஏறக்குறைய 10 முதல் 14 நாட்கழித்த பின்னர் அந்த சுகதேகிக்கு மலேரியாநோய் பீடிக்கிறது.

மாவோ, டெங்கு, ஹொங்கொங் என்று நவீன காய்ச்சல்கள் பல உலவும் இந்நாளில் நோயாளியின் குருதிப் படலத்தைப் பரிசோதனை செய்வதன் மூலம்மட்டுமே நோயை நிதானப்படுத்தலாம். ஆயின் நோயின் குணம் கொண்டும் அதை ஓரளவு ஊகிக்க முடியும். கூதல் நடுக்கத்துடன் திரும்பத் திரும்பவரும் காய்ச்சல், மலேரியாவின் விசேஷ தன்மையாகும். காய்ச்சல் சில மணி நேரம் நீடித்து கடும் வியர்வைக்குப்பின் அடங்குவதே இந்நோய்த் தாக்கத்தின் தனிக் குறிப்பாகும். பெரும்பாலும் இக்காய்ச்சல் தலையிடி, குமட்டல், வாந்தி ஆகியவற்றுடன் நேரிடும்.

**கவனிக்காது போனுல்...**

முற்காலத்தில் மலேரியாவைப்பற்றி இருந்த பயம் பொதுவாக இக்காலத்தில் இல்லை எனலாம். முன்னுளில் ''சிங்கோனு'' மரப்பட்டை

கவனமெடுத்தால் இந்நோய் முற்ருக ஒழிக்கப்படக்கூடியதே. தற்போதைய சௌக்கிய சேவைத் திட்டங்களில் இந்நோக்கத்துக்கான சகல நடவடிக்கைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

**நோயை ஒழிக்க எவ்வாறு ஒத்துழைக்கலாம்?**

தமது உடலுள் மலேரியா ஒட்டுண்ணிகளைக் கொண்டவர்களான நோயாளிகள் இருக்குமிடங்களில்தான் மலேரியா பரவும். எனவே மலேரியாவால் வருந்தும் நோயாளரைத் தேடிக் கண்டுபிடித்துச் சிகிச்சை மூலம் அவர்களைக் குணப்படுத்தவேண்டியது மலேரியாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் மிக முக்கியமான அம்சமாகும்.

இதுசம்பந்தமாக மலேரியாத் தடை இயக்கத்தவர்கள் வீடு வீடாகச் சென்று நோயாளரின் இரத்தத்தைப் பரிசீலனை செய்து மலேரியா நோய் கண்டவர்களுக்கு வேண்டிய சிகிச்சையும் இலவசமாக அளித்து வருகின்றனர். மலேரியாவின் தீவிரம் குறைந்தபகுதியில் வாழ்பவர்கள் காய்ச்சல் காணுமிடத்து அரசினர் மருந்தகங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் இரத்தபரிசீலனையுடன்கூடிய சிகிச்சை பெறுதற்கான சகல நடவடிக்கைகளையும் மலேரியாத் தடை இயக்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். இத்தனை வசதிகளிருந்தும் நோய்வந்தபின்னும் காக்கத்தவறுவதோ அன்றி தூரதிருஷ்டியுடன் நோய் வருமுன்னே காக்கத்தவறுவதோ அறிந்தோ அல்லது அறியாமலோ சமூகத்திற்குச் செய்யும் பெருந்தீமையாகும்.

''நாட்டைக்காத்து நம்மையும் காத்திட
வீட்டைச் சுற்றி வீண் குழி பறியோம்''

என்ற கொள்கையுடன், வீட்டையும் அதன் சுற்றுப் புறங்களையும் துப்புரவு பண்ணி, வீட்டைச்சுற்றியுள்ள தேவையற்ற நீர்நிலைகளையும், நீர் தேங்கி நிற்கக்கூடிய பாத்திரங்களையும் அகற்றி நுளம்பு தோன்றி வளர்தற்குரிய சூழ்நிலைகளை ஒழிக்கவேண்டும். கூடவே வீடுதேடி வரும் மலேரியா தடைப்பகுதியினரின் நுளம்புக்கொல்லி (டி. டி. ரி.) தெளிப்பு ஆட்களைக் கொண்டு, வீட்டின் அழகு, நலனைப்பற்றிய பிரச்னையைப்பெரிதுபடுத்தாது, சமயலறை உட்பட வீட்டின் சகல பகுதிக்கும் டி. டி. ரி. தெளிப்பிக்கவேண்டும். நுளம்பு மிகுந்த இடங்களில் டி. டி ரி தெளிப்பிக்காத ஒரு வீடுகூட மற்ற அயலவர்களுக்கு மலேரியா ஆபத்தை ஏற்படுத்தப் போதுமானது என்பதைக் கருத்தில்கொள்ளவேண்டும்.

மேற்கூறிய சில சுலபமான வழிமுறைகளை நாம் சிறிது சிரமத்தைப் பொருட்படுத்தாது செயல்படுத்தினுல் மலேரியா நம்மை ஒழிக்க முன் நாம் மலேரியாவை ஒழித்து, நம்செல்வத் தாய் நாட்டையும், சீர்மிகு சமுதாயத்தையும் சிறப்புற வாழ வைக்கமுடியும்.

# வெற்றியும் வீரமும் தொழுகையால் ஏற்படும்

தொழும்பொழுது கவனிக்கவேண்டிய ஒழுக்க சீலங்களையும்; சட்ட விதிகளையும் முன்னைய கட்டுரையில் அறிந்தோம். தொழுகையில் இன்பங் கண்டவர் யாவும் கண்டார் என்பதை இந்தக்கட்டுரையில் அறிவோம். அதன் வாயிலாக நாமும் வெற்றியும் வீரமும் பெறுவோம்.

எம்மைப் படைத்தவன் இறைவன் இவ்வுலகிலுள்ள ஜீவராசிகள யாவற்றையும் படைத்தவன் இறைவன். அவ்விறைவனே எல்லா ஜீவன்களையும் இரட்சித்துக்காப்பாற்றிப் போஷித்து வருகின்ருன். ஆதலின் அவ்விறைவனை அல்லாஹ்வை வணங்குதல் வேண்டும். அதையே முஸ்லிம்கள் தொழுதல் வேண்டும் என்று கூறுகின்னர். முஸ்லிம்கள் யாவரும் முஸ்லிம்களாக வாழ்வதற்கு தொழுகையே மூலவேராக அமைகின்றது. தொழுகை சரியாக நிறைவேற்றப்பட்டபின்னர் ஸக்காத், நோன்பு, ஹஜ்ஜு ஆகிய

**— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —**

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

வணக்கங்கள் தேவைப்படுகின்றன. தொழாது புரியும் எந்த வணக்கமும் முறையானதாகவோ பயனுள்ளதாகவோ மாட்டா! ஏன்? தனது எஜமான் இறைவனை அல்லாஹ் என்று நம்பியபின் அதை நிரூபிப்பது தொழுகையே. எப்படி? தன்னுடைய சிரசைத் தரையிலே வைத்துத் தாழ்மையுடன் பணிந்து தனது அடிமைத் தனத்தைக் காட்டக்கூடியது தொழுகையன்றி வேறெதுவுமன்று. பணத்தைக் கொடுக்கும் போதோ அன்றி, நோன்பு நோற்கும்போதோ சிரசைத் தரையில் வைத்துக் கொள்வதில்லை. தொழும்பொழுது மட்டுமே கைகட்டி நின்றும் முழங்காலில் கையூன்றிக் குனிந்தும் தரையிலே நெற்றியை வைத்தும், பின்னர் இருப்பில் இருந்தும், உலகில் ஏனைய சீவராசிகள் புரியும் வணக்கங்களையும் சேர்த்து அட்ட அங்கானுஷ்டானமாகச் செயல்படுகின்ருேம். அதனுல் நான் எனும் அகந்தையகல்கின்றது. நான் என்பதகலின் எனதென்பதும் அகல வழி பிறக்கும். அது பணத்தையும் ஏனைய செல்வங்களையும் ஏழைகளுக்குப் பங்கிடச் செய்யும் பண்பையுண்டாக்கும். இவை இரண்டும் அகன்றுவிட தன்னை அர்ப்பணிக்கும்தன்மையேற்படும். அப்போதுபசி, தாகம், இன்பம் அனைத்தையும் நீக்கும் தன்மையேற்பட்டு நோன்பு வைத்துக்கொள்ளவும், மனைவி மக்களையும் செல்வங்களையும் துறந்து சில நாட்களுக்கு வெளிச் செல்லும் பண்பும் உண்டாகியும்விடும். அதனுற் பல யாத்திரைகளைச்செய்து வரவும் அவனது உள்ளம் பண்பட்டதாக ஆகிவிடும். இப்போது எதற்கும் ஆயத்தமுள்ள வெற்றிவீரனுக ஆகிவிடுகிருன். இதுவே இஸ்லாம்காட்டும் இலேசான வழியாகும்.

**பொறுமையை வளர்க்கும்**

நாயகம் றசூலே கரீம் ஸல்) அவர்கள் தங்களுக்குச் சஞ்சலங்களும் பீதியும் ஏற்பட்டபோதெல்லாம் உடனடியாக நல்ல முறையிலே (வுழு) சுத்தஞ்செய்து கொண்டு பள்ளியினுள்ளே புகுந்து தொழ ஆரம்பித்து விடுவார்கள்; சஞ்சலமும் துன்பமும் நீங்கிவிடும். மீண்டும் வீடுசெல்வார்கள். கடுமையான காற்று வீசத் தொடங்கினுலும், கருமுகில் சூழ்ந்தாலும், சூரிய சந்திர கிரணங்கள் ஏறபட்டாலும் தொழுகையை ஆரம்பித்து விடுவார்கள். ஏன்? தங்களை அரவணைத்து ஆவனசெய்த மனைவியார் கதீஜா (றழி) அவர்கள் இவ்வுலகை நீத்து சுவனபதி அடைந்தபோது தாங்கமுடியாத வேதனை ஏற்பட்டது அவர்களுக்கு. உடனேபரிசுத்தவுழுவுடனே இறைவனை ஒருமையுடன் தொழுதார்கள். வேதனை நீங்கிப்பொறுமையுடன் வீடு திரும்பி மனைவியரை நல்லடக்கஞ்செய்யும் கடமைகளில் ஈடுபட்டார்கள்.

**மதீனுவில் வெற்றி தந்த தொழுகை**

மக்காவிலிருந்து மதீனுவுக்கு ஹிஜறத் (யாத்திரை) செய்தார்கள். அப்போது தொழுது கொண்டார்கள். அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களும் தொழுதார்கள். 300 பேர் கொண்ட சிறிய தொகை முஸ்லிம்கள் 1000 பேர் கொண்ட எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்து வெற்றிபெற்றனர் வீரமும் பெற்றனர்.

தாயையும் மகவையும் இழந்தபோது தொழுகை மூலம் வெற்றியும் வீரமுங் கண்ட அப்பாஸ் (றழி) அவர்களைப் பற்றிக் கேளவியுறும் போது மெய்சிலிர்க்கின்றது. அப்பாஸ் (றழி) அவர்கள் தொழுகையில் இன்பங் கண்ட தீரர். ஒருமுறை வியாபாரம் நிமித்தம் வெளியூர் சென்றுதிரும்பினுர்கள். வீடு அண்மியதும் தமது அருமை மகவு காலமாகிவிட்



டதை அறிந்தார்கள். உடனே ஒட்டகையில் இருந்து இறங்கி வுழு (சுத்தம்) செய்து இறைவனைத் தொழுதார்கள். தொடர்ந்து ஒட்டகை மீதேறி வீடு போனுர்கள். அவர்கள் எவ்வித கிலேசமும் துன்பமும் அற்றவர்களாய் வருவதைக் கண்ட அவரது மனைவியுஞ் சுற்றமும் துக்கமுகத்துடன் காணப்பட்டனர். உடனே அவர்களை நல்ல முறையிலே அல்லாஹ்வைத் தொழுது துயர்துடைக்கும்படி வேண்டினுர்கள், அப்பாஸ் (றழி) அவர்கள். இதே போன்று மற்ருெருசமயம் மனைவியும், இன்னெருசமயம் அருமைத் தாயாரும் காலமாகிய போழ்து இவ்வாறு தொழுகையைக் கொண்டு தங்கள் மனதை ஆற்றி வெற்றியாளனுக மாறிக் கொண்டார்கள்.

**வீரர் அலியார் தொழுகை**

யுத்த களத்திலே வீராவேசத்துடன் பகைவரை வென்று விடும். அலியார் (றழி) அவர்கள் தொழுகைக்காக வுழு (சுத்தம்) செய்யும் போது ஐந்தும் ஒடுங்கித் தேகம் மஞ்சணித்துவிடுவார்கள். அவரது தோழர்கள் ''ஏன் இவ்வாறு அஞ்சி அடங்கி நிறம்மாறிவிடுகிறீர்கள். யுத்தத்திலே பகைவர் மேற் புலிபோலப் பாய்ந்துவிடுகிறீர்களே'' என்றனர்.

(6ம் பக்கம் பார்க்க)

# பத்திரிகைகளில்...

3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பித்து விழாமுடிவடைந்தபின் திரும்பினேன்.

(ஆ) 1966-ல் பேராதனையிலுள்ள இலங்கைப்பல்கலைக் கழகத்துத் தமிழ்ச்சங்கம் சுமார் ஒருவார காலமாக மாபெரும் இலக்கிய விழாவொன்றை நடாத்தியது. நானும் என் சொந்தச்செலவில் அழைப்பின் பேரில் கவியரங்க நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தேன்.

குறிப்பிட்ட இரண்டு விழாக்களுக்கும் காலம்,

புகைப்படங்களும் பேச்சாளர்கள், அரசியல்வாதிகள் ஏனைய கலைஞர்களுடைய புகைப்படங்களும் வெளிவந்து கொண்டேயிருந்தன. ஆனுல் கலைஞர்களைப்பற்றிய செய்திகளோ கவிஞர்களின் தனிப்பட்ட புகைப்படங்களோ கவிஞர் குழுவினரின் கவியரங்கப் புகைப்படங்களோ முற்ருக இடம்பெறவில்லை. இவ்வாறு கவிஞர்களைப் [illegible] பிர [illegible] களிலொன்றுதான் எனது மாமனின் வாடிக்கைப் பத்

## பார்வையைத்...

(2-ம் தக்கத் தொடர்ச்சி)

சொன்னேம், யாரிடம் சொன்னேம் என்று ஞாபகம் வைத்துக்கொள்வதே பெரும் சித்திரவதையாகி விடும்.

(தொடரும்)

## ஆசிரிய தலைவர்...

2-ம் பக்கத்தொடர்ச்சி

மைகளுக்காக மிகவும் வாதாடி அதிகாரிகளும், அரசாங்கமும் மதிக்க ஆசிரியர்களின் தலைவனுகவும்


யாழ்ப்பாண மாநகரசபை

### ஏலவிற்பனை

1. நாவாந்துறைச் சந்தை (பழையது)க் குத்தகை;

2. ஆட்டிறைச்சிக் கடை எண் 2, பெரியகடைக் குத்தகை;

3. பெரியகடை மீன் சந்தையில் பொதிகட்டும் கடதாசி விற்பனைக் குத்தகை.

1-7-69 தொடக்கம் 31-12-69 வரை மேற்படி மூன்றையும் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமான உரிமை ஏலவிற்பனை மூலம் எதிர்வரும் 20-6-69ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு சம்பந்தப்பட்ட அவ்வச் சந்தையில் / இடங்களில் வைத்து விற்கப்படும் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விகளுக்கான கேள்வித் தொகை முழுவதையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஏலவிற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

மேற்கொண்டு தேவைப்படும் தகவல்களை அலுவலக நேரத்தில் மாநகர அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண
மாநகரசபை.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-6-69. 1606

### விற்பனைக்கு.

**ஆதனம்:**

யாழ்ப்பாணம் கீரிமலை-காங்கேசந்துறை ரோட்டில் 6 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. டாக்டர் போல் அவர்களின் பங்களாவுக்கு எதிரிலும் சீமேந்து தொழிற்சாலைக்குச் சமீபத்திலும் அமைந்துள்ளது. ஆகக்கூடிய விலைக்கு கொடுக்கப்படும். மேதர், 33, இரத்னகாரா பிளேஸ், தெஹிவளை. 1193

**நாய்க்குட்டிகள்:**

உயர்ந்த இன அல்சேசன் நாய்க்குட்டிகள் 4 (நான்கு) 40 (நாற்பது) நாட்கள் கொண்டவை. உடனே விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி தங்கருணி அரியரத்தினம், சுதுமலை கிழக்கு, சுதுமலை. 1030

### தேவை

குத்தகைக்கு / விலைக்கு 6 பரப்பு காணி சுன்னுகம் பட்டண எல்லைக்குள் காங்கேசன்துறை யாழ்ப்பாணம் ரோட்டில் உடனடியாகத் தேவை. சோமசுந்தரம், 50, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 1025


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலைவர் . . .

2-ம் பக்கத்தொடர்ச்சி

மைகளுக்காக மிகவும் வாதாடி அதிகாரிகளும், அரசாங்கமும் மதிக்க ஆசிரியர்களின் தலைவனாகவும் கல்வியின் காவலனாகவும் வாழ்ந்தார். அவர்களுடைய அருகாலச்சேவை பொதுவாக ஆசிரியர்களுக்கென இருந்தாலும் சிறப்பாகத் தமிழாசிரியர்களுக்கும், அதிலும் சைவத்தமிழாசிரியர்களுக்குங் கிடைத்தமை ஒரு பெரும் அதிர்ஷ்டமென்றே கருது தல்வேண்டும். வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் அவரின் தலைமையில் சிறந்து வளர்ந்து அகில இலங்கையிலும் ஆசிரிய சமூகத்தை இணைக்க உதவியது என்று தான் கூறுதல் முறையாகும்.

கல்வி உலகிற்கும் ஆசிரியர் சமூகத்திற்கும்கிடைத்த வாய்ப்புப்போல மயிலிட்டிக் கிராமச் சங்கத்திற்கும் அவருடைய பகுதி மக்களுக்கும் அவரின் தலைமை கிடைத்தது.

அன்னாரின் ஆன்மசாந்திக் கிரியைகள் நடைபெறும் இன்று அவர் ஆன்ம சாந்தியைவேண்டிப் பிரார்த்திப்போம்.

தலையிடி, குமட்டல், வாந்தி ஆகியவற்றுடன் நேரிடும்.

**கவனிக்காது போனால்...**

முற்காலத்தில் மலேரியாவைப்பற்றி இருந்த பயம் பொதுவாக இக்காலத்தில் இல்லை எனலாம். முன்னாளில் ''சிங்கோனு'' மரப்பட்டையிலிருந்து பெறப்பட்ட ''குயினைன்'' ஒன்றே இந் நோய்க்கு நிவாரணியாக இருந்தது. இந் நாளில் வளர்ந்துவிட்ட விஞ்ஞானம், மலேரியாவைச் சில நாட்களில் முற்றாக மாற்றுவதற்குரிய ஏற்ற தனிச் சிறப்பான மருந்துக்களை அளித்துள்ளது. சிகிச்சையின்மை அல்லது சிகிச்சைக் குறைவினால் நோயாளியின் உடல் நலம் பெடுப்பாலும் கேடடையும் கூடவே நோயும் மறுதலிக்கும். தொடர்ந்து மரணமும் சம்பவிக்கும்.

**வருமுன் காக்க....**

ஏனைய நோய்களைப்போல மலேரியாவும் பல்வேறு கட்டங்களில் தடுக்கப்படக் கூடியதாகும். மலேரியாத் தொற்றுநோயாளி, நுளம்பு, சுகதேகி என மூன்று பிணைப்புகளைக் கொண்டது. இந்தப் பிணைப்புகளில் முதலிரண்டையுமிட்டு போதிய

சுமார் ஒருவார காலமாக மாபெரும் இலக்கிய விழாவொன்றை நடாத்தியது. நானும் என் சொந்தச்செலவில் அழைப்பின் பேரில் கவியரங்க நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தேன்.

குறிப்பிட்ட இரண்டு விழாக்களுக்கும் காலம், பணம் இரண்டையுமேவிரயமாக்கி போய்க் கலந்து திரும்பினேன்.

குறித்த இரண்டு பெரிய விழாக்களிலும் பங்குபற்றிய பேச்சாளர்களைப் பற்றி புகைப்பட சகிதம் நாட்கணக்காக செய்திகள் பல பத்திரிகைகளிலும் வெளிவந்தன. கவியரங்க நிகழ்ச்சி பற்றியோ கவிஞர்களைப்பற்றியோ எந்தப்பத்திரிகையிலும் எவ்வித சுருக்கமான செய்தியுமே வெளிவரவில்லை. இவைபோன்ற நான் கலந்துகொண்ட விழாக்களில்-கவிஞர்கள் புறக்கணிப்பு நிகழ்ச்சிகள் இன்னும் ஏராளமுண்டு.

அண்மையிலே நடந்தேறிய இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் 11-வதுமாநில மகாநாட்டுக் கவியரங்கிற்கும் அழைப்பின் பேரிற் சென்றேன்.

மாநாடு முடிவுற்றுப் பல தினங்களுக்குப் பிறகொரு நாள்... எனது கலைவாழ்வில் தீவிர அக்கறை கொண்ட என் மாமனார் அவர்கள் என்னை நோக்கி, ''நீங்களும் தமிழரசுக்கட்சி மகாநாட்டுக்குக்கவியரங்கத்தில் பங்கு பற்றுவதாகச் சொல்லிப் போனீர்களே! பத்திரிகையில் எதையுமே காணவில்லையே. கவியரங்கம் நடக்கவேயில்லையா?'' என்று ஆவலுடன் விசாரித்தார்.

அரசியற் கொள்கைகளில் அவரும் நானும் எதிரும் புதிருமானவர்களென்றாலும் என் சொந்த வாழ்விலும்-கலைவாழ்விலும் அவர் கொண்டுள்ள அக்கறையை அவரின் முகபாவம் கூறாமற் கூறியது.

உடனே கவியரங்கச் செய்திகள் வெளிவந்த சில பத்திரிகை இதழ்களை அவருக்குக் காட்டினேன்; ருசுப்படுத்தினேன்.

ஒரு பத்திரிகையில் கவிஞர்களெல்லோருடைய பெயர்களும் குறிப்பிடப்படாமல் தலைமை தாங்கிய கவிஞரின் பெயரை மட்டும் குறிப்பிட்ட கவியரங்கப் புகைப்படமொன்று பிரசுரமாகியிருந்தது. குறித்த செய்திகளைக் கண்ணுற்ற பிற்பாடுதான் மாமனாருடைய அகமும் முகமும் மகிழ்ச்சியினால் மலர்ச்சியுற்றன.

ஏனைய பிரபல பத்திரிகைகளில் நாட்கணக்காக மாநாட்டுச் செய்திகளும்,

தவிப்பட்ட புகைப்படங்களோ கவிஞர் குழுவினரின் கவியரங்கப் புகைப்படங்களோ முற்றாக இடம்பெறவில்லை. இவ்வாறு கவிஞர்களைப் புறக்கணித்த பிரபல பத்திரிகைகளிலொன்றுதான் எனது மாமனாரின் வாடிக்கைப் பத்திரிகையுமாகும். இதே துர்ப்பாக்கிய நிலை தொடர்ந்தும் நீடிக்காமல் கவிஞர்களுக்கும் உரிய இடத்தையளித்துக் கௌரவிப்பதற்கு ஈழத்துப் பத்திரிகைகள் தாராள மனப்பான்மையுடன் முன்வரவேண்டும். பத்திரிகை நிருபர்களும் பேச்சாளர்களுக்குக் கொடுக்கும் அதே இடத்தைக் கவிஞர்களுக்குங் கொடுத்து ஊக்குவித்தல்வேண்டும். இனிமேலாவது கவியரங்க நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் படமெடுத்துக் கலந்துகொண்ட கவிஞர்களின் பெயர்களை வரிசைக்கிரமமாக எழுதிப் பத்திரிகைகள் வெளியிடவேண்டும்; கவிதைகளிலுள்ள சிறந்த பகுதிகளையும் நிருபர்கள் பெருமனதுடன் வாங்கிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைக்கவேண்டும். ஒவ்வொரு கவிஞர்களையும் தனித்தனியே படம் பிடித்தும் பத்திரிகைகள் பிரசுரமாக்கவேண்டும்.

பத்திரிகைகள், நிருபர்கள் மாத்திரமல்ல, விழா நிர்வாகஸ்தர்களும் கவிஞர்கள் விஷயத்தில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

அர்த்தமற்ற பேச்சுக்களினால் அமைதியான உள்ளங்களை அசைத்துச் சலனப்படுத்தி, வீண் சந்தேகங்களை கிளப்பி சாதி, மதம், இனம், மொழி என்ற ரீதியில் ஒரே நாட்டு மக்களை- ஒரு தாயின் பிள்ளைகளைப் பிளவுபடுத்திப் பிரித்து அதனால் அரசியல் ஆதாயம் பெறுவதொன்றையே குறிக்கோளாகக் கொண்ட 'போலி' அரசியல் வாதிகளுக்கு முதலிடமும் முக்கியத்துவமுங் கொடுக்கும் பத்திரிகைகள்- பொறுப்பு மிக்க தலைவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்களைக் கூட புகைப்பட சகிதம் வெளியிடும் பத்திரிகைகள்- சினிமா நட்சத்திரங்களின் தேவையற்ற செய்திகளுக்குப் பல பக்கங்களைப் பலியிட்டு விரயமாக்கும் பத்திரிகைகள்- கவிஞர்களுக்காக சொற்ப இடத்தை ஒதுக்குவதால் ஒன்றும் நஷ்டமேற்படமாட்டாது. மற்றவர்களைப்போல கவிஞர்களும் கௌரவிக்கப்பட்டால்தான், நாடு முன்னேறும், நாட்டு மக்கள் மனம் வளர்ச்சியடையும். பற்பல ஔவைகளை, பாரதிகளை, கம்பன்களை, இளங்கோக்களை, வள்ளுவர்களை ஈழம் ஈன்று பெருமைப்பட முடியும் கவிஞன் ஆத்மதிருப்தியடைவான்.


A. 40 ★ ரயர் — ரியூப்

புதிய சிறந்த 5.25 x 16 fபான் பெல்ட்

டன்லப் ரயர் ★ பிஸ்ரன் றிங்ஸ்

★ பெயறிங்ஸ்

வில் M. K. 12 றேசர் ★ லொட்ஜ் ப்ளக்

டன்லப் ஸ்ரோஸ்

236, ஆஸ்பத்திரி வீதி, ... யாழ்ப்பாணம். 1587



# திருமண அழைப்பிதழ்

கொல்லங்கலட்டி தெல்லிப்பளை திருமதி சீனிவாசகம் அவர்களது சிரேஷ்ட புத்திரன் **செல்வன் எஸ். சரவணபவன்** (Apothecary) அவர்களுக்கும் கோப்பாயைச் சேர்ந்த திரு. எஸ். செல்லத்துரை அவர்களது சிரேஷ்ட புத்திரி **செல்வி தவச்செல்வராணிக்கும்** (25-6-69) புதன் கிழமை இரவு 7-57 முதல் 9-46 க்குள் வரும் சுபவேளையில் குயின்ஸ்டவுன் ஆலிஎல மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறவிருப்பதால் உறவினர் நண்பர்கள் அனைவரையும் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

திருமதி சீனிவாசகம், (87/2 ஆரியர் றோட், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்) அவர்களது இல்லத்தில் (29-6-69) மாலை 5 மணிக்கும் 7 மணிக்குமிடையில் வரவேற்புபசாரம் நடைபெறும். உறவினர் நண்பர்கள் இவ் அழைப்பை ஏற்றுக்கொள்ளுமாறுவேண்டிக்கொள்ளுகின்றோம்.

**திருமதி சு. சீனிவாசகம்** (மணமகனின் தாய்)

**ச. செல்லத்துரை தம்பதிகள்** (மணமகளின் பெற்றோர்)

1602


கம் வைத்துக்கொள்வதே பெரும் சித்திரவதையாகி விடும்.

(தொடரும்)

அபூபக்கர் சித்திக் (றழி) அவர்களும் தொழுதார்கள். 300 பேர் கொண்ட சிறிய தொகை முஸ்லிம்கள்

கள். யுத்தத்திலே பகைவர் மேற் புலிபோலப் பாய்ந்து விடுகிறீர்களே'' என்றனர்.

(6ம் பக்கம் பார்க்க)


கேசன்துறை யாழ்ப்பாணம் றோட்டில் உடனடியாகத் தேவை. சோமசுந்தரம், 50, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 1025



யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய

## ஷெல் விவசாய இரசாயனப் பொருள்களுக்கும்

## குரேமோ உரங்களுக்கும்

ஒரு பிரதான கைவிருப்பாளர்களாக நாங்கள் நியமிக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகின்றோம்.

கிரமமாக எங்கள் வான் வண்டிகள் முழுவட்டாரத்திலும் நடமாடி எங்கள் ஆதரவாளர்களுக்குச் சுணக்கமில்லாததும் தாராள மனப்பான்மையுள்ளதுமான சேவையை உறுதிப்படுத்தும்

## ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அண்ட் பிரதேர்ஸ்

162, 164, 166, ஆசுப்பத்திரி வீதி

பெரியகடை — யாழ்ப்பாணம்.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கார்:

கம்பர் கோக் (Humber-Hawk) EN 7610 & போக்வாட் (Bougward) 2ஸ்ரீ 7610 சொந்தப்பாவிப்பிலுள்ள வெகு நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் ஏ. இரட்சகன், சித்தங்கணி.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாண நகரில் கூப்பனொன்று நா. கதிராமு என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# 'ஈழநாடு' பொது அறிவுப் போட்டி-8

சென்ற வாரத்து கேள்விகளுக்கு சரியான விடைகள்: 1. வில்லியம் ஹென்ஜன் 2. 46, 3. தீக்கோழி, பென்குவின், கிவி, எமு, 4. எத்தியோப்பியா, 5. 379 சதுரமைல், 6. கிரேக்க நாட்டவர், 7. பட்டினத்தார், 8. சேபால ஆட்டிகலே, 9. ஆந்திரா 10. ஜெனரல் சுகர்தோ

## பரிசு பெறுபவர்

இம்முறையும் நேயர்களில் எவராவது சரியான விடை அனுப்பவில்லை. கோழி பறக்க முடியாத பறவை என்று எழுதியவர்கள் கோழி பருந்தைக் கலைப்பதைக் காணவில்லைப்போலும். ஒரு பிழையுடன் விடை தந்த நேயருக்கு முதலாவது பரிசான பத்துரூபாயை கொடுக்க முடிவுசெய்தோம். பரிசு பெறுபவர்:

ச. பற்றிமா, 'அன்னராஜன் அகம்', கரவெட்டி, மேற்கு கரவெட்டி.

இரண்டாவது பரிசுக்கு தகுதியான விடை எதுவும் கிடைக்கவில்லை. அடுத்துவரும் போட்டிகளில் பெரும்பாலான கேள்விகள் 'ஈழநாடு' பத்திரிகையில் வரும் செய்திகள், கட்டுரைகளிலிருந்தே தெரிவுசெய்யப்படும் என்பதை நேயர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

## இந்த வாரக் கேள்விகள்

1. இங்கிலாந்து கிரிக்கட் காப்டனின் பெயர் என்ன? 2. இலங்கையில் எண்ணெ சுத்தி நிலையம் எங்கே இருக்கிறது? 3. கியூபாவின் தலைநகரம் எது? 4. யாழ்ப்பாணம் மத்திய சந்தையைக் கட்டும் ஸ்தாபனத்தின் பெயர் என்ன? 5. சிங்கம் சராசரி எத்தனை வருடங்களுக்கு உயிர் வாழும்? 6. நைலோன் நூலைக் கண்டு பிடித்தவர் யார்? 7. தொண்ட மண்டல சதகம் என்ற நூலைப் பாடியவர் யார்? 8. ஹரிஜன நலனுக்கு தமிழக அரசு எவ்வளவு பணம் செலவிடத் தீர்மானித்துள்ளது? 9. தற்சமயம் ஈழத்தில் தங்கியிருக்கும் பிரபல தமிழக சங்கீத வித்வான் யார்? 10. தான் தேடாப் பொருளுக்கு...... மீதியை நிரப்புக.

## விகட கவிதைப் போட்டி—(8)

சென்ற போட்டியில் கணவனை நச்சரித்து ஓயாமல் உபத்திரவம் கொடுக்கும்பெண்களை நேயர்கள் சப்பித் தின்று விட்டார்கள். அற்புதமான கவிதைகள், ஆனந்தமான நகைச்சுவை.

## பரிசுக் கவிதை

மிகச் சிறந்த கவிதையென்று கீழ் வருவது தெரிவு செய்யப்பட்டது:-

'ஓயாமல் நச்சரித்து உபத்திரவம் கொடுப்பவள்
மேல் ஒரு பாட்டென்ன
ஓராயிரம் கவிதை ஒரு நொடியில் பொழிந்திடுவேன், மோடா, பத்து



டாக்டர் வி. ரி. பசுபதி தலைமையில் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா மத்திய குழுக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

## பொலிஸ் வீரர் பெர்ளுண்டோவின் வாயுவேக மின்னலடிகள்

### கரபந்தாட்டத்தி இறுதி ஆட்டம் மின் ஒளியில் இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினம் 'மின் ஒளியில்' நடைபெற்ற, கரபந்தாட்டத்தில் யாழ். பொலிஸ் கோஷ்டிக்கும், வல்வெட்டித்துறை யுனைட்டட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'செற்றப்' போட்டி மிகவும் போட்டியாக இருந்தபோதிலும், பார்ப்பதற்கு மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. யாழ். பொலிஸ் கோஷ்டியின் வீரர் பெர்ளுண்டோவின் வேகமான, மின்னல் தாக்குதல்களினாலேயே, வல்வெட்டிக் கோஷ்டி தோல்வியடைந்தது எனவும் கூறலாம். முதல் ஆட்டத்திலும் கடைசி ஆட்டத்திலும் பொலிஸ் கோஷ்டி 15—5, 15—7 புள்ளிகளால் வெற்றி பெற்றது. வல்வெட்டிக் கோஷ்டி இரண்டாவது ஆட்டத்தில்மட்டும் 15—5 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தம்வகித்தார்.

### கே. கே. எஸ். வெற்றி

காங்கேசன்துறை ஐக்கிய

### வல்வெட்டி வெற்றி

வல்வெட்டித்துறை யுனைட்டட் கழகத்துக்கும், கரவெட்டி கலா பொம்பஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில், ஈற்றில் வல்வெட்டித்துறை கோஷ்டி வெற்றி பெற்றது. பொம்பஸ் கோஷ்டி முதல் ஆட்டத்தில், மகேஸ்வரனின் திறமையான விளையாட்டினால் 15—3 புள்ளிகளால் வெற்றி பெற்றது. பின் நடைபெற்ற இரு ஆட்டங்களிலும் வல்வெட்டித்துறை கோஷ்டி 15—13, 16—15 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தம்வகித்தார்.

### சென். பீற்றஸ் வெற்றி

சென். பீற்றஸ் கழகத்துக்கும், யாழ், கரபந்தாட்டக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். பீற்றஸ் இரு ஆட்டங்களில் 15—11 15—5 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. கே. சுப்பிரமணியம் மத்தி



''ஈழநாடு'' பத்தாவது ஆண்டு விழாப்போட்டிக்குப் பரிசிலாக வெள்ளிக் கிண்ணம் வழங்க நிதியுதவி வழங்கிய கட்டடக்கலை நிபுணரான கொழும்பு வி.ஸி. துரைராஜா.

## கைதடி இந்து வாலிபர் நடத்து போட்டி

ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை திறப்பு விழாவை முன்னிட்டு கைதடி இந்து வாலிபர்சங்கத்தினரால் இம்மா

## இன்றைய கூட்டங்கள்

ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தினர் கூட்டுச் சர்வகட்சி மகாநாடு இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை கமிட்டி அறையில் நடைபெறவிருக்கிறது.

0 0

பரந்தன் ரசாயன தொழிற்சாலையிலுள்ள நான்கு தொழிற்சங்கங்களின் மகாமகாநாடு இன்றுகாலை 10 மணிக்கு தமிழ் காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இம் மகாநாட்டைக் கூட்டியுள்ளார்.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 26வது வருடாந்த மகாநாடு திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் இன்று காலை 9மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலா மன்றத்தில் நடைபெறவிருக்கிறது. உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேற்பிள்ளை, மேயர் திரு. எஸ் நாகராசா, திரு. வ. பொன்னம்பலம், திரு. ஏ. விசுவநாதன், டாக்டர் பதியுதீன் முகம்மது ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க 2வது கிளையின் வருடாந்தக்

## ''நகரின் கேந்திர ஸ்தானத்திலும் நாவலருக்கு சிலை வேண்டும்''

### திரு. ஸி. சுந்தரலிங்கம் கருத்து!

மட்டுவில், வியாழன்

''ஆறுமுகநாவலர் பெருமான் நல்லூரிலிருந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய அதே காலத்தில் தான அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்தடைந்த திரு. ஒல்கட் என்பவர் கொழும்பிலிருந்து பௌத்த மத தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தார். இன்று திரு. ஒல்கட் என்பவருக்கு இலங்கைத் தலைநகரான கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து தரிசிக்கும்வண்ணம் சிலை அமைக்கப்பட்டிருக்கும் போதுஎமது நாவலர் பெருமானுக்கு மட்டும் ஏன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான ஒரு கேந்திர ஸ்தானத்தில் சிலை அமைக்கக்கூடாது? இவ்வாறு முன்னாள் வவுனியா ஆட்சிமன்ற உறுப்பினரும். அடங்காத் தமிழர் முன்னணித் தலைவருமான திரு. ஸி. சுந்தரலிங்கம் நமது நிருபரிடம் கூறினார்.

திரு ஸி சுந்தரலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

''சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரியதொண்டாற்றிய நாவலர் பெருமானுக்கு ஈழம்வாழ் சைவ தமிழ் மக்கள் யாவரும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம் அவரின் பேரில் விழா எடுப்பதுபோற்றத்தக்கது. அவருடைய சொத்தைப் பாதுகாத்து வைக்கவேண்டியதும் அவர் நினைவுவிழா எடுக்க வேண்டியதும்சைவத்தமிழ்மக்களின் பாரிய கடமையாகும். நல்லூரிலே பிறந்து வளர்ந்த நாவலருக்கு நல்லூரில் சிலை அமைத்தாலும் சந்தர்ப்பம் கிடைப்பின் அவர் சிலையை யாழ்நகரின் பிரபலமான இடத்தில் அமைப்பதே நலம் என்பதுஎன் கருத்து.'

## ஏழைகளுக்கு அன்னதானம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் தியேட்டர் ஒன்றில் எம். ஜி ஆரின் படம் 150வது நாள் தொடர்ந்து திரையிடப்பட்டதை முன்னிட்டு 'யாழ். எம். ஜி. ஆர்.' திரு. சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினார்

### விவசாயப் பயிற்சி

சிறுபோக நெற் செய்கையாளருக்கான பயிற்சி வகுப்பு ஒன்று அண்மையில் விவசாய உத்தியோகத்தர்களினால் பட்டிப்பளை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இவ் வகுப்பில் பசளை உபயோகம்கிருமிநாசினி பாவித்தல் களைகளை அளிக்கும் முறை என்பன விரிவாகப் போதிக்கப்பட்டன.


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Pre Poya 4 Shows
Richard Johnson
Elke Sommer
in
DEADLIER, THAN THE MALE

MANOHARA
JAFFNA
தினசரி 6-30, 10-00
பிரீபோயா, போயா 2-30
ருக்மணி, டொமி, அசோகாபொன்னம்பெருமாள்
நடித்த
சமியா பிறிந்தகே பெவியாய
(Sinhalese)

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
அசோகன் — மணிமாலா
நடித்த
வல்லவனுக்கு வல்லவன்
(புதிய கொப்பி)

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
சிவாஜி - கே.ஆர். விஜயா
நடித்த
தங்கை

இன்று மட்டும்
ராஜா 152வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பரிசுக் கவிதை

மிகச் சிறந்த கவிதையென்று கீழ் வருவது தெரிவு செய்யப்பட்டது:-

'ஓயாமல் நச்சரித்து உபத்திரவம் கொடுப்பவள்
மேல் ஒரு பாட்டென்ன
ஓராயிரம் கவிதை ஒரு நொடியில் பொழிந்திடு
வேன், மோடா, பத்து
ரூபாய்க்கோ என்மானம் விற்ருய் நீ என முழங்கி
முதுகில் ஏப்பைக்
கோலாலே அடி கொடுப்பாள், விருப்பமெனில்
பரிசெனக்கு கொடுத்திடீரே!

இதை எழுதிப் பத்துரூபாய் பரிசு பெறுபவர்:: மு. வைத்தியலிங்கம், 'பத்மாலயம்', உரும்பராய்.

## பாராட்டுக்குரியவை

பின்வரும் நேயர்கள் எழுதிய கவிதைகள் மிகவும் பாராட்டுக்குரியவை என்று மதிக்கப்பட்டன. எஸ். ஆறுமுகசாமி, பீப்பிலா, வல்வெட்டி. 'மாக்யா', 23/5 எல்லைவீதி, மட்டக்களப்பு. எஸ். எல். சவுந்தரநாயகம், இலுப்பைக்குளம், மதவாச்சி, அ. த. சுந்தரலிங்கம், அல்வை. இ விநாயகலிங்கம், சுன்ஞகம்.

## அடுத்த போட்டி

சொல்வழி கேளாது தன்னிஷ்டமாகத் திரியும் சிறுவன் பேரில் ஒரு விகடகவிதை புனையுங்கள், பார்ப்போம். கவிதை நாலு அல்லது ஐந்துவரிக்கு மேற்படடப்படான்.

### நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 18-6-69க்கு முன்பொது அறிவுப் போட்டி (8), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது.

கூப்பன்

**'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(8)**

பெயர்........................................

விலாசம்........................................

........................................

திகதி ........................

கூப்பன்

**'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(8)**

பெயர்........................................

விலாசம்........................................

........................................

திகதி..................

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தம்வகித்தார்.

### கே. கே. எஸ். வெற்றி

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், கரவெட்டி யூனியன் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில், ஐக்கிய விளையாட்டுக் கழகம் 15—3, 8—15, 15—11 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. கே. கந்தவனம் மத்தியஸ்தம் வகித்தார்.

சென். பீற்றஸ் கழகத்துக்கும், யாழ். கரபந்தாட்டக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். பீற்றஸ் இரு ஆட்டங்களில் 15—11, 15—5 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. கே. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### இன்று இறுதியாட்டம்

கரபந்தாட்டத்தின் இறுதியாட்டம் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் 'மின் ஒளியில்' மிக உற்சாகமாக நடைபெறவிருக்கிறது.

# யாழ் தெரிவு கோஷ்டியுடன் சென். அந்தனீஸ் மோதும்

## பிரதம விருந்தினராக வடபகுதி பொலிஸ் அதிபர் கலந்துகொள்கிருர்

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்டச் சங்கத்திஞல் நடாத்தப்பட்ட 'நொக்கவுட்' உதைபந்தாட்டப்போட்டியில் சாம்பியஞக வந்த பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்துடன், இன்று யாழ். விளையாட்டரங்கில்எதிர்த்து மோதுவதற்கு ''யாழ்.உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி'' நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

''யாழ். தெரிவுக் கோஷ்டிக்கு'' திரு. ஏ. தேவராசா தலைமைதாங்குகின்ருர். இத் தெரிவுக்கோஷ்டியில்அங்கம் வகிக்கும் மற்றைய வீரர்கள் விபரம்:

தேவராசா (காப்டன்), நவாப்ராஜா, அகஸ்ரின், ராசையா, மணி, மனுவல், சிவபாலன், யோசப், சூசைப்பிள்ளை, அன்ரன், ரட்ணசிங்கம், மகேந்திரன், சந்தியா, அமலதாஸ், பி. அன்ரன், எம். பிரூன்ஸிஸ், தங்கராசா, கோமேந்திரன், எம். பத்மநாதன்.

பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்துக்கு திரு. பெர்ஞண்டோ தலைமைதாங்குகின்ருர். இவ் இருகோஷ்டிகளுக்குமிடையிலான போட்டி இன்று மாலை யாழ். விளையாட்டரங்கில் 4-30க்கு நடைபெறும். இப்போட்டிக்கு வடமாகாண பொலிஸ்அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (தே. நி

ஈழநாடு விழா

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு'' 10-வது ஆண்டு விழா மாணவர் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:

சிரேஷ்ட பிரிவு: செல்வன் எஸ். சண்முகலிங்கம் (மகாஜஞ கல்லூரி) செல்வன் ரி. வசந்தகுமார் அமெரிக்க மிஷன் கல்லூரி உடுப்பிட்டி செல்வி கே. சிரானி விஞேதினி (மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி)

மத்தியபிரிவு:- ஆண்கள்- செல்வன்கள் யு. பாண்டியன் (மகாஜஞகல்லூரி) எஸ். சந்திரபாலன் (நாவலர் வீதி, முள்ளியவளை) எஸ். பெஞ்சமின் (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

மத்தியபிரிவு: பெண்கள்: செல்விகள் தி. சாந்தவதி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கே. சியாமளலக்ஷ்மி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். கலாவதி (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி)

கனிஷ்டபிரிவு: ஆண்கள் செல்வன்கள் ஏ. புராந்தகன் (மகாஜனக் கல்லூரி), யு. சேரன் (மகாஜனக் கல்லூரி), எஸ். தேவானந்தன் (சித்தங்கேணி கணேசவித்தியாலயம்)

கனிஷ்டபிரிவு: பெண்கள் செல்விகள் கே. சந்திரவதனு (அருணோதயா கல்லூரி), எஸ். தனுஜா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), ஏ. வசந்தா (வேம்படி மகளிர் கல்லூரி).

## கைதடி இந்து வாலிபர் நடத்து போட்டி

ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை திறப்பு விழாவை முன்னிட்டு கைதடி இந்து வாலிபர்சங்கத்தினரால் இம்மாதம்28ம் திகதி காலை 9மணி தொடக்கம் 11 மணிவரை கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலைமண்டபத்தில் நாவலர் வாழ்க்கை வரலாறு பற்றிய கட்டுரைப்போட்டி யொன்று நடத்தப்படவிருக்கிறது.

25 வயதுக்குட்பட்ட எவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்என்றும் இந்து வாலிபர் சங்கத் தலைவருக்கு விண்ணப்பங்கள் 20ம் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றியும்...


(5-ம் பக்கத்தொடர்ச்சி)

அலியார் (றழி) அவர்கள் 'ஆம், ஆம். உண்மைதான். யுத்தகளத்திலே அல்லாஹ்வின் பகைவருடன் போராடுகின்றேன். அதஞல் அப்படி நடந்து கொள்கின்றேன். இங்கே அல்லாஹ்வின் அடிமை என்பதை நிரூபித்துக்கொள்ளப் பள்ளிவாசலுக்கு வந்துவிட்டேன். இதஞல் இப்படி நடந்துகொள்கின்றேன்'' என்றனர். சுருங்கக்கூறின் யுத்தங்களிற் பெற்ற வெற்றிகள் அனைத்திற்கும் தொழுகையையே ஆயுதமாகக் கொண்டனர். த கள் சேனையின் அணிகள் பின்வாங்குகின்றதெனக் கண்டதும் ஒரு சில ஸகாப்பாக்கள் வுழு (சுத்தம்) செய்து கொண்டு இறைவன் சந்நிதானஞ்சென்று நன்மை நாடித் தொழ ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் திரும்பி வரும்போது புதிய உற்சாகத்தோடும் வீரவுணர்ச்சியோடும் காணப்படுவர். அன்றியும் பகைவரை எதிர்ப்பதிலே பன்மடங்கு உறுதியும் பெறுவர். இச் சந்தர்ப்பத்தில் மற்ருெரு கூட்டம் வுழு (சுத்தம்) செய்துகொண்டு தொழுது கொள்ளும். இப்படியே யுத்தம் முடியும்வரை எல்லா வீரர்களும் தொழுகையை முடியுமானவரை நிறைவேற்றிவிடுவார்கள். இவ்வாருக இறைவன்மீது அசையாத நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாகவும், அந்த நம்பிக்கையை மற்ற மக்களுக்கெடுத்தோதியதன் காரணமாகவுமே இறைவன் அவர்களுக்கு அளவற்ற அருளையும் நிகரற்ற அன்பையும் அருளினுன். இக்கொள்கையை நாமும் பின்பற்றி வாழ்ந்து, உலகியலிலும் ஆத்மீக வளர்ச்சியிலும் முன்னேறுவோமாக.

மேயர் திரு. எஸ் நாகராசா, திரு. வ. பொன்னம்பலம், திரு. ஏ. விசுவநாதன், டாக்டர் பதியுதீன் முகம்மது ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க 2வது கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3-30மணிக்கு நடைபெறவிருக்கிறது. தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் சொற்பொழிவாற்றுவார்கள்.

அகில இலங்கை தேசிய பொதுகாவலாளர் சங்க 2வது வருடந்த பொதுக்கூட்டம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் சங்க காரியாலயத்தில் இன்று காலை 8மணிக்கு நடைபெறும்.



### புதிய தலைவர்

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் பட்டினசபையின் புதிய தலைவராக திரு. சின்னத்தம்பி ராஜேந்திரம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாண இரும்புத் தொழிற்சாலை அதிபரும் ரொட்டரி சங்க மெம்பருமாவார்.

## இன்று இறுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபவர்களுக்கென அன்பளிப்புச்செய்துள்ளனர்.

அலங்கார வர்த்தக வண்டிகளினதும், விஞேத உடையாளர்களினதும் பவனியில் கலந்துகொண்டவர்களது பட்டியல் நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்தன. இப்போட்டியில் கலந்துகொண்டவர்கள் இன்று காலை 7 மணிக்கு ஈழநாடு காரியாலயத்தித்தில் சமுகம்கொடுக்கவேண்டும். வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் இந்நிகழ்ச்சி ஊர்வலத்தை ஆரம்பித்துவைப்பார்.

இன்று மாலை 4.30மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் மைதானத்தில் உதைபந்தாட்ட மோதல் நடைபெறும்.

டிங்கிரி சிவகுரு கோஷ்டியினர் வர்த்தக பவனியில் கலந்துகொள்கின்றனர்.

(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

தல் களைகளை 'அளிக்கும் முறை என்பன விரிவாகப் போதிக்கப்பட்டன.

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
**உயிரா மானமா**

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்
நடித்த
**திருமால் பெருமை**

மகத்தான 3-வது வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
இன்று முதல்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்த
**பொம்மலாட்டம்**
திரைக்கதை வசனம் சோ. இசையமைப்பு வி. குமார்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
★ ரவிச்சந்திரன் ★ காஞ்சனு
நாகேஷ், அசோகன், மாதவி
நடித்த
(ஈஸ்ட்மன் வர்ணச்சித்திரம்)
**அதே கண்கள்**
பாடல்கள்: எம். எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: திருலோகசந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org